விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 06 செவ்வாய்க்கிழமை (18.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 061

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## மேலும் 2 எலும்புக்கூடு நேற்று மீட்கப்பட்டது

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழியில் இருந்து மேலும் இரண்டு மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராத புரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரெட்ண தலைமையில் மீண்டும் நேற்று திங்கட்கிழமை 24 வது தடவையாக குறித்த மனித புதை குழியின் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப் பட்டிருக் கின்றன.

20 ஆம் பக்கம் பார்க்க..

# புனர்வாழ்வு அளிக்காவிட்டால் 12 ஆயிரம் தோட்டாக்களே செலவு

### இடர் முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு

(மாத்தறை)

யுத்தம் முடிவடைந்த பின்னர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்காது போயிருந்தால் வெறும் 12 ஆயிரம் தோட்டாக்கள் மட்டுமே செலவாகியிருக்கும் என இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மாத்தறை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் 12 ஆயிரம் உறுப்பினர்களை கொலை செய்யாது அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப் பட்டன.

சர்வதேசத்தில் இருந்து இலங்கைக்கு வரும் துரைமாருக்கு இது மறந்து போய்விட்டது. போரில் தமிழ் மக்கள் கொலை செய்யப் பட்டதாக எம்மில் சிலரே கூறுகின் றனர்.



மக்கள் கொல

20 ஆம் பக்கம் பார்க்க..

## ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பு இன்று!

(சென்னை) .

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாக குறைக்கக் கோரும மனுமீதான தீர்ப்பு இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவிருப்பதாக இந்தியச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மனுமீதான தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

3 பேரின்

20 ஆம் பக்கம் பார்க்க..

## கடற்படை மீதும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் தொடர்பில் பலர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் கடற்படையினரும் தமது பிள்ளைகளை கடத்தியதாக நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஆணைக்குழுவின் விசாரணையின் போது உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்றுடன் தொடர்ந்து நான்காவது நாளாகவும் யாழ். மாவட்டத்தில் இடம் பெற்றது. இதில் நேற்றைய

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நேற்றுடன் நிறைவு பெற்றன!

### நம்பிக்கை இல்லை என மக்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நான்கு நாட்களாக நடைபெற்று வந்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்றுடன் நிறைவு பெற்றன. இவ் விசாரணையில் சுமார் 160 பேர் கலந்து கொண்டுள் ளனர். விசாரணைகளில் சாட்சியம் அளித்தவர்கள் தமக்கு நூறுவீதம் இவ் ஆணைக்குழு மீது நம்பிக்கை இல்லை எனவும் கூறினர்.

(20ஆம் பக்கம் பார்க்க...)



விசாரணைக்குழு முன் தனது கவலைகளை கொட்டித்தீர்த்த களைப்பினால் சோர்ந்துள்ள ஓர் அன்னை.

காணாமல் போனோர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில்

## இலங்கைக்கு எதிராக பிரி. செயற்படாது!

### வெளியுறவு அலுவலகம் தெரிவிப்பு

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா இலங்கைக்கு எதிராக எவ்வித யோசனை வரைபையும் சமர்ப்பிக்காது என்று பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகம் உறுதியளித்துள்ளது.

பிரித்தானியாவில் வாழும் இலங்கையை சேர்ந்த கன்சவேட்டிவ் கட்சி உறுப்பினர்களிடம் இந்த உறுதியை குறித்த அலுவலகம் வழங்கியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. எனினும் அவை மிகவும் மந்த கதியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

எனினும் இலங்கைக்கு

20 ஆம் பக்கம் பார்க்க..

## புலிகளுடன் தொடர்பா? ஆணைக்குழு கேள்வி

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனவர்களின் உறவினர்களிடம் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவினர் காணாமற் போனவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பிருந்ததா? என்று சாட்சியமளிக்க வருகை தந்தவர்களிடம் முக்கிய கேள்வியாக எழுப்பியிருந்தனர்.

வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்றுடன் தொடர்ந்து நான்காவது நாளாகவும் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றது. இதேவேளை கடந்தமாதம் கிளிநொச்சி மாவட்டத்திலும் இடம் பெற்றது. இதில் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற விசாரணையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு

20 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கையின் முன்னேற்றத்தை அமெரிக்கா புரிந்து கொள்ளவில்லை

### அமைச்சர் பீரிஸ் கவலை



(கொழும்பு)

இலங்கை போருக்கு பின்னர் அடைந்துள்ள முன்னேற்றத்தை அமெரிக்க அரசாங்கம் உரிய முறையில் புரிந்து கொள்ளவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனை அந்நாட்டின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் அண்மையில் தன்னிடம் கூறியதாகவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்

20 ஆம் பக்கம் பார்க்க..

# படை முகாமிலிருந்த மகனை பார்க்கச் சென்ற தந்தை கொலை

### சாட்சியத்தில் நேற்று தகவல்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் பிடித்துக் கொண்டு செல்லப்பட்ட தனது மகன் மானிப்பாயிலிருந்த கஜபாகு படைமுகாமில் கை , கால் கட்டப் பட்ட நிலையில் இருப்பதையறிந்து சென்ற கணவரை இராணுவத்தினர் அடித்ததில் அவர் அங்கேயே உயிரிழந்ததாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நேற்றைய தினம் வயோதிபத் தாயொருவர் சாட்சியமளித்ததோடு காணாமற் [illegible] மாறு ஆணைக்குழுவினரிடம் கைகளைக்கூப்பி கும்பிட்டபடி மன்றாட்டமாக கண்ணீர்விட்டழுதார்.

வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்றுடன் தொடர்ந்து நான்காவது நாளாகவும் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றது. இதில் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசாரணையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காணாமல் போனோர் தொடர்பிலான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

#### 24 பேர் சாட்சியம்

நேற்று இடம்பெற்ற ஆணைக் குழுவின் விசாரணையில் 24 பேர் சாட்சியமளித்திருந்தனர். சுமார் 50 பேர் வரை ஆணைக்குழு

20 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பியுடனான கூட்டணியே நாட்டில் ஆட்சி செய்கிறது

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இன்றும் ஆட்சியில் இருப்பது பல மாதங்கள் கண் விழித்திருந்து ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தை நடத்தி கட்டியெழுப்பப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த பலர் அன்று இந்த பேச்சுவார்த்தையை கைவிட்டுச் சென்றனர் என தெரிவித்துள்ள அவர், அரசியலில் ஆரம்பத்தை மறந்து விடக்கூடாது எனவும் கூறியுள்ளார்.

அரசியலுக்கு வந்து 25 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக பொலநறுவையில் அமைச்சரவை கௌரவிக்கும் வகையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தை ஏற்படுத்த 2004 ஆம் ஆண்டு 11 மாதங்கள் நித்திரையை தொலைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

ஜே.வி.பியினர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர், சந்திரிகா அம்மையார் ஆகியோர் அமர்ந்து இரவு 7 மணிக்கு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் இது முடிய பின்னிரவு 2 மணி வரை நடக்கும்.

சில நேரங்களில் நான் மட்டுமே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வேன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஏனையோர் எழுந்து சென்று விடுவார்கள். ஜே.வி.பியின் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தால் அவர்களில் ஒருவர் ஒரு மணிநேரத்திற்கு மேல் பேசுவார்கள்.

கூட்டணியை ஏற்படுத்த வேண்டுமாயின் அவர்கள் கூறுவதை கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். சிலர் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள் எழுந்து சென்று விடுவார்கள்.

2004 ஆம் ஆண்டு 11 மாதங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஏற்படுத்தி நானும் ரில்வின் சில்வாவும் கையெழுத்திட்டோம். அந்த முன்னணிதான் இன்றும் அரசாங்கமாக உள்ளது என்றார். (எ-11)

## மர்மப் பொருளால் வீடு தீக்கிரை

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டம் வலப்பனை-ராகலை தோட்டத்தில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு வானில இருந்து விழுந்த மர்ம பொருள் காரணமாக தீ ஏற்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதேவாசிகள் இணைந்து தீயை கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தனர். வீட்டின் கூரையில் ஆறு அங்குல அளவான துளை ஏற்பட்டுள்ளது.

வானத்தில் இருந்து விழுந்த மர்ம பொருளின் சிதைவுகள் கிடைக்காத போதிலும், இந்த சம்பவம் குறித்து பேராதனை பல்கலைக்கழக பிரதிநிதிகள் குழுவொன்று விசேட ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

மர்ம பொருள் விழுந்த வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ-11)


மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

17.02.2014 முதல் 22.02.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(C-6534)

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)



தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-6535)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER


## ரயில் சாரதிகள் போராட்டம் முடிவு

(கொழும்பு)

ரயில் சாரதிகளின் வேலைநிறுத்த போராட்டம் நேற்று மாலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என ரயில் தொழிற் சங்கங்கள் தெரிவித்தன.

போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பினை அடுத்தே ரயில் சாரதிகளின் வேலைநிறுத்த போராட்டம் முடிவடைந்துள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ரயில் சாரதிகள் வேலைநிறுத்த போராட்டத்தின் காரணமாக கடந்த நான்கு நாட்கள் ரயில் சேவை ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கச்சதீவை மீளப்பெறும் பேச்சுக்கு இடமில்லை - இந்தியா அறிவிப்பு

(சென்னை)

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப் பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

கச்சதீவை மீட்கக் கோரி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதியினால் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது, இந்திய மத்திய அரசு சார்பில் பதில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதில், இந்தியா கச்சத்தீவை இலங்கைக்கு தாரைவார்க்கவில்லை. 1974 இல் கடல் எல்லையை வரையறை செய்த போதே கச்சதீவு இலங்கைக்கு சொந்தமாகிவிட்டது.

கச்சதீவு தொடர்பான இலங்கையுடனான ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது. கச்சதீவை திரும்பப் பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று இந்திய மத்திய அரசின் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)


தவறிவிட்டது

S.நடராஜா எனும் பெயருடைய சாரதி அனுமதிப் பத்திரம் இன்சுரன்ஸ் என்பன 15.02.2014 அன்று திருநெல்வேலிக்கும் நீர்வேலி கரந்தன் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும்.

கபில் ஸ்ருடியோ இல.68 பலாலி றோட், திருநெல்வேலி/ கபில் ஸ்ருடியோ கரந்தன் சந்தி, நீர்வேலிக்கோ/ 0776002364 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளவும் (5620)

அறிவித்தல்

அருளம்பலம் உமாமதீஸ்வரி ஆகிய நான் 1982 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை உமாமதீஸ்வரி என்ற பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்தி வருகின்றேன் என்பதை அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள

அருளம்பலம் உமாமதீஸ்வரி

(5621)


# மட்டு.வுக்கு தலைமைப்பதவி கிடைத்தால் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்வேன்

## தமிழ்க் கூட்டமைப்புக்கு கருணா சவால்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த ஒருவரை தலைவராக நியமித்தால் அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தான் ஒதுங்குவதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சவால் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மக்கள் நலனைக்கொண்டு செயற்படுவதில்லையென தெரிவித்த அவர், தமது கதிரைகளை பாதுகாக்கும் நோக்கிலேயே அவர்கள் செயற்படுவதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக் காட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு கிராம சேவையாளர் பிரிவுகளைக்கொண்ட களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் கலாநிதி கோபாலரட்னம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி குழு தலைவரும் மீள்குடியேற்ற பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 45 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

களுவாஞ்சிகுடி பிரதேசத்தின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்திக்கென 150 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி பணிகள் பொதுமக்களின் ஆலோசனையுடன் நடைபெறவேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வேண்டுகோளின் அடிப்படையில் இது தொடர்பில் விசேட கூட்டங்கள் நடத்தப்படுவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி மூலம் வறுமை ஒழிப்பு,கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம்,ஆரம்ப கல்வி,பொது நோக்கு அபிவிருத்தி உட்ட பல திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆ.சுதாகர், மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன்.ரவீந்திரன் உட்பட திணைக்கள தலைவர்கள்,கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.அத்துடன் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களில் பொதுமக்களின் கருத்துகளும் பெற்றுக்கொள்ளப்பட்டமை விசேட நடவடிக்கையாகும். (எ-11)


காணி விற்பனைக்கு

அளவெட்டி ஜெயாப்பிறஸ் சந்தியிலிருந்து 50யார் தொலைவில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : (5618)

0114949234

தேவை

பால்கோவா கன்டோஸ் நல்ல தரமான முறையில் தயாரிக்கக் கூடிய அனுபவம் உள்ளவர் தேவை.

தொ.பேசி : (சி-6537)

0771880017

விளம்பரத் தொடர்புகளுக்கு...

0213210815,0215671532

valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சிரிப்பு சிகிச்சை

ஆபிரஹாம்லிங்கனிடம்ஒருவர், "ஒவ்வொருவருக்கும்கால்கள்எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்'' என்று கேட்டார்.

தான் எந்த அளவைச் சொன்னாலும் அதை அந்த ஆசாமி மறுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை அறிந்த லிங்கன், ''ஒவ்வொருவருக்கும் அவர்களின் இடுப்பிலிருந்து தரையில் படுகின்ற வரை...'' என்று நகைச்சுவையாக பதிலளித்தார்.

இப்படிப்பட்ட ஏடாகூட ஆசாமிகளிடமிருந்து மட்டுமல்ல நோய்களிடமிருந்தும் இந்த நகைச்சுவை உணர்வு நம்மைக் காப்பாற்றும்.

மருத்துவ முறைகள் கூட உடல்-மனம் இரண்டின் ஒத்துழைப்பைப் பெரிதும் வலியுறுத்தி இருக்கின்றன. மருத்துவத்தில் மற்றுமொரு பரிமாணமாக உருவாகியுள்ளதே ''சிரிப்பு சிகிச்சை முறை''

மனதை அழுத்திக் கொண்டிருக்கும் பாரம் குறைந்து மனது லேசாக வேண்டுமெனில் செலவில்லாத, எளிதான ஓர் அணுகுமுறை சிரிப்பது, மனம் விட்டுச் சிரிக்கும்போது, தசைநார்கள் நெகிழ்வடைகின்றன. சிரிப்பு தலைமுதல் கால்வரை உடல் முழுவதும் ஊடுருவி இறுகிப் போயுள்ள தசைகளை மிருதுவாக்குகிறது.

சிரிப்புச் சிகிச்சையின் மூலம் எபின்ஃபிரைன், கார்டிசால் போன்ற மன அழுத்தம் தரக்கூடிய ஓமோன்களின் சுரப்பைக் குறைக்கலாம். மனம் ஒன்றி தியானம் செய்வதுபோன்றவலிமையானஒருவகையாகஇந்தசிரிப்பைச் செய்யலாம்.

தியானத்தைப் பொறுத்தவரை நினைவுகளையும் மனதையும் நாம் கட்டுப்படுத்தி புறச்சூழலிலிருந்து முற்றிலும் விடுபட்டு தமது மனதை ஒருமுகப்படுத்தி நிலை நிறுத்த வேண்டும். சிரிக்கும் போது நம்முடைய எந்தவித சுய முயற்சியுமின்றி நமது உணர்வுகள் இயற்கையாகவே ஒருங்கிணைந்து நமக்கு சந்தோஷம், சமாதானம் மற்றும் நிம்மதியைத் தருகிறது. இது இயற்கை நமக்குத் தந்த வெகுமதி.

சிரிக்கும்போது நோய்த்தடுப்பு சக்தி அதிகரிக்கிறது என்பது வியப்பிற்குரிய ஓர் உண்மை. பல தொற்று நோய்கள், அலர்ஜி ஏன் புற்றுநோயிலிருந்து கூட இது நம்மைக் காப்பாற்றுகிறது என்றால் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாகும். எதிர்மறை உணர்வுகளான பதற்றம், சோர்வு, கோபம் இவை அனைத்தும் நம் உடலின் நோய்த்தடுப்பு மண்டலத்தைப் பாதித்து, நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து விடும் என்று மனநல நோய்த் தடுப்பாளர்கள் நடத்திய ஆய்வில் நிரூபணமாகி உள்ளது. அமெரிக்க மருத்துவர் லீஎஸ் பெர்க் என்பவர் ''சிரிப்பு- நமது உடலின் பாதுகாவலனான வெள்ளை அணுக்களை அதிகரிக்கச் செய்வதுடன் அண்டி-பாட்டிக்கின் அளவையும் கூட்டுகிறது.'' என்கிறார்.

சிரிப்புச் சிகிச்சைக்குப் பின் இமினோகுளோபிலின்-ஏடு எனும் ஆண்டிபாட்டிக்கின் அளவு அதிகரித்து, மூக்குத் தசை மற்றும் சுவாசப் பாதையில் ஊடுருவும் சில வைரஸ், பக்றீரியா மற்றும் பிற நுண்ணுயிரிகளை ஊடுருவ விடாமல் செய்து விடுகிறது என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நகைச்சுவை மன்ற உறுப்பினர்கள் பலருக்கு பொதுவாக தாக்கும் சளி, வறட்டு இருமல் மற்றும் மார்புத் தொற்று நோய் போன்றவை தாக்குவது குறைந்துள்ளது. மனிதனைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் எயிட்ஸ், புற்றுநோய் போன்ற தடுப்பு மண்டலத்திற்குப் பெரிதும் உதவுகிறது இந்தச் சிரிப்பு.

காலையில் எழுந்தவுடன் பதினைந்து நிமிடங்களாவது சிரித்துப் பேசி மகிழ்ச்சியுடன் அன்றைய பணியைத் தொடங்குவீர்களேயானால் அந்நாள் முழுவதும் உற்சாகமாக காணப்படுவீர்கள்.

சிரிப்புபோல்உடலாடிநிவாரணிஎந்தமருந்தும்கிடையாது. இதற்குக்காரணம் நாம் சிரிக்கும் போது அதிக ஒட்சிசனை உள்ளிழுக்கிறோம். பிரத்தியேகமான சீருடை அல்லது காலணி அணியத் தேவை இல்லாத ஓர் ஏரோபிக் பயிற்சி இந்தச் சிரிப்பு. மேலோட்டம் ஓடும் போது சிந்தும் வியர்வைத் துளிகளுக்கு சிரிப்பில் வேலைஎயில்லை.

''ஒரு நிமிடத்தில் சிரிக்கும் சிரிப்பு என்பது பத்து நிமிடங்கள் துடுப்பு வலிப்பதற்குச் சமம்'' என்கிறார் அமெரிக்க டாக்டர் வில்லியம் ஃப்ரை. ஏனெனில் சிரிப்பு பிற ஏரோபிக் பயிற்சி செய்யும் இதயத்தைத் தூண்டி இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யும் வேலையை மிக எளிதாகச் செய்கிறது.

உடல் உழைப்பு அதிகமில்லாமல் அமர்ந்திருந்து வேலை செய்பவர்களுக்கும் படுக்கை மற்றும் சக்கரநாற்காலியில் இருக்கும் நோயாளிகளுக்கும் சிரிப்பு பயிற்சி அதிக உபயோகமானது.

தற்கொலை எண்ணம் கொண்ட பலர் அதீதமான நம்பிக்கையோடு வலம் வருகின்றனர். சிரிப்பு சிகிச்சையால் உயர் இரத்த அழுத்தத்திற்கும் இதய நோய்களுக்கும் பரம்பரை உடல்பருமன், புகைப்பழக்கம், கொழுப்புச் சத்துள்ள உணவை அதிகம் சாப்பிடுதல் போன்றவை காரணங்களாகக் கூறப்படுகின்றன. ஆனால் இவற்றிற்கு மனஅழுத்தம் தான் மிக முக்கியமான காரணம்.

அதேபோல் உங்களுக்கு இதயநோய் வருவதற்கு அதிக வாய்ப்பிருந்தால் அதனைத் தடுப்பதற்கு மிகச் சரியான தடுப்பு மருந்து சிரிப்பு, இதய நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் கூட சிரிப்பு மூலம் இரத்தச் சுழற்சியை அதிகரிக்கச் செய்து அதிகளவில் இதயத் தசைகளுக்கு ஒட்சிசன் அளிக்க முடியும். இரத்தச் சுழற்சி அதிகரிக்கும் போது இரத்தம் உறையும் வாய்ப்பு அரிதாகி விடுகிறது. ஹார்ட் அட்டாக் வந்து பைபாஸ் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களும் கூட நகச்சுவை மன்றத்தில் உறுப்பினராகி சிரித்து பலன் பெறலாம்.

ஒற்றைத் தலைவலி மற்றும் டென்சனால் வரும் தலைவலி உண்டாகும் பெண்களுக்குச் சிரிப்புச் சிகிச்சைக்குப் பின் வலியின் அளவு குறைந்துள்ளது.

சரியான விதத்தில் குடல் நகர்வதற்கும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்க வைப்பதற்கும் மனிதனுக்குச் சிரிப்பு உதவுகிறது.

சிரித்தபடி இருக்கும் மனிதர்களைப் பாருங்கள். உற்சாகம் ததும்ப பிறரை ஈர்க்கக்கூடிய தோற்றத்துடன் அவர்கள் இருப்பார்கள். சிரிப்பதனால் கண்ணீர்ப்பை பிதுக்கப்பட்டு கண்ணீரிலிருந்து கண்ணீர் வரும் போது அது கண்களில் ஒளி நிரம்பி இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி கண்களை மேலும் அழகூட்டுகிறது.

சிரிக்கும்போது அடிவயிற்றுத் தசைகள் நன்கு அசைவதால் தொப்பை வயிறு கொண்டவர்களின் வயிற்றின் அளவுகூட ஓரளவு குறைவதற்கும் அது உதவுகிறது. ஆகவே சிரிப்பு உடல் எடையைக் குறைப்பதற்கான நல்லதோர் பயிற்சி இல்லையா?

*இளசை சுந்தரம்*

# நுண்கலை இளமாணி பட்டப்படிப்பிற்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

நுண்கலைத் துறையில் இளமாணிப் பட்டப்படிப்பிற்கான (சங்கீதம், நடனம், ஓவியம்) இந்தியப் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் புதுடில்லியிலுள்ள கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையால் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் 20 முதல் 25 வயதிற்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் பாடத்திற்கு (சங்கீதம், நடனம், ஓவியம்) க.பொ.த. உயர் தரத்தில் "B" தர சித்தி உட்பட மூன்று பாடங்களில்சித்திபெற்றிருக்கவேண்டும். அத்துடன் க.பொ.த சாதாரண தரத்திலும் உயர் தரத்திலும் ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இல. 14 மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில்இன்றுசெவ்வாய்க்கிழமை முதல் 25 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் ஒரு மணிவரை வார நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பபடிவத்தை http://www.iccrindia.net/scholarshipschemes.html எனும் இணைய முகவரியிலும் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் பட்டியல் மற்றும் தூதரக சான்றிதழ் உட்பட புலமைப்பரிசில் விண்ணப்பப்படிவம்-2014 (ஆறு தொகுதிகள்), உடல் உறுதி உறுதிப்பாடு-சுகாதாரப் பரிசோதனை படிவம்-2014 (ஆறு தொகுதிகள்), விண்ணப்பதாரிகளுக்கான பொது அறிவுறுத்தல்கள்-2014 ஆகிய மூன்று விண்ணப்பப் படிவங்களையும் இந்தியத் துணை தூதரகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமும் (ஆறு தொகுதி) துணையாக இறுவெட்டுக்களும் ஏழு புகைப்படங்களும் மேற்குறிப்பிட்ட முகவரியில் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்குமிடையில் நேரில் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை விண்ணப்பங்களைக் கையளிக்கும் போது கொண்டு வருதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய கலாசார மைய தொலைபேசி இலக்கமான 01126 84698 அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்துணைத்தூதரகதொலைபேசி இலக்கமான 0212220504 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நகர திட்டமிடல் அபிவிருத்தி பிரிவு திறப்புவிழா இன்று

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு பிரதேச அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு திறந்து வைக்கப்படவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சு.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் UN-HABITAT நிறுவனத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் சமன் ஏக்கநாயக்க, நிறுவனத்தின் அதிகாரி திருமதி ஐ.எஸ். இந்து வீரசூரி, முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் முல்லை. மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்குறித்த பிரிவு அவுஸ்திரேலிய நாட்டின் நிதியுதவியுடன் UN-HABITAT என்ற நிறுவனத்தின் அமுல்படுத்தலின் கீழ் செயற்பாட்டிற்கு வந்துள்ளது.

அத்தோடு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதியிலும் குறித்த நிறுவனத்தினரால் இப்பிரிவு திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-9-267)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 60 |
| தக்காளி | 30 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 70 | 100 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 30-70 | 60-100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 70 | 90 |
| பாகற்காய் | 70 | 120 | 130 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | 20 | 60 | 50 |
| பயற்றங்காய் | 120 | 100 | 150 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 50 | 70 |
| கறிமிளகாய் | 70 | 80 | 130 |
| முருங்கைக்காய் | 200-300 | 400 | 180 |
| போஞ்சி | 40 | 80 | 80 |
| கத்தரி தம்புள்ள | 50 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 30-50 | 40 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 |
| இராசவள்ளி | 70 | 100 | 70 |

# இராசி பலன்

*18.02.2014*
*(மாசி 06, செவ்வாய்க்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*திருதியை முற்பகல் 9.49 மணிவரை*
*உத்தரம் காலை 7.18 மணிவரை*
*இராகுகாலம் 3.32-5.02 மணிக்கு*
*சுபநேரம் 11-02-12.32 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்*
*அமிர்த சித்தம்*

**மேடம்** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், கடன்களை வருவிக்க எடுத்த முயற்சி வெற்றிதரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிறர் உதவியுண்டு.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், நிதிநிலை உயர்வடையும், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**சிங்கம்** இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பேச்சில் இனிமை பிறக்கும்.

**கன்னி** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவுகள் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்டநேரம் காத்திருக்க நேரிடலாம்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை பலப்படும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் இனி மனம் மாறுவர், மாற்றினத்தவர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், மருத்துவச் செலவுகள் குறையும்.

**கும்பம்** துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, விரயங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பிவந்து இணைவர், கௌரவமான நாள்.


வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கலை இலக்கிய மன்றங்களிடையே போட்டி


(மானிப்பாய்)

வடமாகாண பாரம்பரிய கூத்துக்களை எதிர்கால சந்ததியினருக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் சர்வதேச ரீதியில் கூத்துக்களை பிரபல்யப்படுத்தவும் வடமாகாணத்திலுள்ள கலை இலக்கிய மன்றங்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.




இதனடிப்படையில், கூத்துக்கள், இசை நாடகம், கூத்து வழி நடனம் ஆகிய போட்டிகள் மாகாணமட்டத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மன்றங்களுக்கு முதலாம் பரிசாக ஜனாதிபதி விருதுடன் ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசும், இரண்டாம்பரிசாக ஆளுநர் விருதுடன் 75ஆயிரம் ரூபா பணப்பரிசும், மூன்றாம் பரிசாக முதலமைச்சர் விருதுடன் 50ஆயிரம் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஆர்வமுள்ள மன்றங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை நாடகப் போட்டி, இணைப்பாளர் இல 48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-23)




நன்றி: மிரர்

# ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவு 2 வருடமாக வழங்கப்படவில்லை

## மானிப்பாய் பிரதேச சபைக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(மானிப்பாய்)

ஒப்பந்தகாரரர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை பின்னடித்து வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கூட்டமொன்று பதில் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நெல்சிப் திட்டத்தின்கீழ் 5 வீதிகள் பிரதேச எல்லைக்குள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் பண்டத்தரிப்பு , பிரான்பற்று, நல்லுண்ணி வீதி கொங்கிறீட் மற்றும் தார் போடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

இதனது 2ஆவது கொடுப்பனவை வழங்க கூடாதென பிரதேச சபையின் ஆளும் தரப்பின உறுப்பினர் ஒருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதற்கு சபை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், நெல்சிப் திட்ட அதிகாரிகள், குறித்த பிரான்பற்றை சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர், பிரதேச மக்கள் என யாரும் இதற்கெதிராக எவ்வித முறைப்பாடுகளையும் செய்யாத நிலையிலும் வீதிகளின் புனரமைப்பு திருப்தியாக இருப்பதாலும் குறிப்பிட்ட நபரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பு வெளியாகியது,

இதனையடுத்து இது வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஆளும்கட்சி உறுப்பினர்களான கௌரிகாந்தன், குமணன், சிவகுமார் ஆகியோர் ஒப்பந்தகாரரின் 2ஆம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படக்கூடாது என வாக்களிக்க கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என ஏனைய 9 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

அத்துடன் கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கு சரியான காரணங்கள் இருக்க வேண்டும். தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கைகள், நெல்சிப் திட்ட அதிகாரிகளின் அறிக்கைகள், குறித்த பிரதேசத்தை சேர்ந்த பிரதேச சபை உறுப்பினரின் கருத்து, பிரதேச மக்களின் அபிப்பிராயம் என்பவற்றைக்கொண்டே இவை தீர்மானிக்கப்படல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

இதேவேளை குறித்த பிரதேச சபையின் புதிய கட்டட ஒப்பந்தகாரருக்கு வழங்க வேண்டிய தொகை 2 வருடத்திற்கு மேலாக பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக வழங்கப்படாமல் உள்ளது.

இக் கொடுப்பனவை பெறுவது சம்பந்தமாக ஒப்பந்தகாரர் பிரதேச சபைக்கெதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

# காணாமற் போயிருப்பீர்கள்! வயோதிபர் சாட்சியம்

எனது இரண்டு மகன்களும் காணாமற் போன நேரம் நீங்களும் (விசாரணைக் குழுவினர்) இங்கு இருந்திருந்தால் இந்நேரம் காணாமற்போய் காணாமற்போனோர் பட்டியலில் இணைந்திருப்பீர்கள் என்று தனது இரண்டு பிள்ளைகள் காணாமற் போனமை தொடர்பில் சாட்சியமளித்த சாவகச்சேரியினைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் ஆணைக்குழுவினருக்கே அச்சுறுத்தல் விடுத்தார்.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதி பதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன் சாட்சியம் சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே குறித்த வயோதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-6)

# சதுர்த்தி

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் சங்கடஹர சதுர்த்தி விரத பூஜை இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து விசேட பூஜை இடம்பெறுமென தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (அ-2)

# ஆளுமை விருத்தி கருத்தமர்வு நான்கு தினங்கள் நடைபெறும்

இந்தியாவிலுள்ள பி.எஸ்.ஜே. ஆளுமை விருத்தியும் சமூகநலன் விருத்திக்கான மன்றத்தின் இயக்குநர்களான திருமதி சபீதா பள்ளியில் மற்றும் ஜமுனா அபரஞ்சி ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இவர்கள்யாழ்.மாவட்டத்தில்நான்கு பாடசாலைகளில் நான்கு தினங்கள் கருத்தரங்குகளை இலவசமாக நடத்தவுள்ளனர்.தெல்லிப்பழையூனியன் கல்லூரியில் நாளை புதன்கிழமையும்யா/இராமநாதன்கல்லூரியில்எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமையும் உடுவில் மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும்தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

கருத்தரங்குகள் யாவும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இக்கருத்தரங்குகளில்பங்குபெறும் ஒவ் வொரு மாணவர்களுக்கும் தனித்தனியாக சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளதாக அமைப்பாளர் ஜனனி புஷ்பநாதன் தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தாம் அறியாதுள்ள தமது திறமைகளை தாமாகவே தெரிந்து கொள்ளவும் பயம் என்ற திரையைக் கிழித்தெறிந்து சரியான பாதையில் தன்னம்பிக்கையுடன் வளர்ச்சி பெற தமது இக் கருத்தரங்கு மாணவர்களுக்கு பெரிதும் உதவும் என மேற்படி நிலையத்தின் இயக்குநரான திருமதி சபீதா பள்ளியில் தெரிவித்தார்.

மற்றவர்களுடைய உதவியின்றி தமது செயற்பாடுகளை தாமே சுயமாக செய்யும் நிலைக்கு அவர்களை ஊக்கப்படுத்தி தெளிவு பெற இக்கருத்தரங்குகள் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என மன்றத்தின் இயக்குநரான ஜமுனா அபரஞ்சி தெரிவித்தார்.

இக் கருத்தரங்குகளில் பெருந்தொகையான மாணவர்கள் பங்கு பெறுவர் என கல்லூரி சமூகம் தெரிவித்தது. (அ)



கலாபூஷணம் லெ.கெங்காதரன் ஆச்சாரியார்

அகவை எழுபதில்
உம் புகழ்
உலகெங்கும் பரவட்டும்
உவகை கொள்கின்றோம்
இனிதே!
உலோக சக்கரவர்த்தியாய்
இமயம் தொடும் தூரத்தில் நீர்
என்றென்றும் உம்
புகழ் திக்கெட்டும் ஒலித்திட
கெங்காதரன் ஆச்சாரியார்
அவர்கள் வாழ்க வாழ்க
வளமுடன் என்று
போற்றி மகிழ்கின்றோம்.

இன்று எழுபதாவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார் கலாபூஷணம் லெ.கெங்காதரன் ஆச்சாரியார் அவர்கள்.

இ நண்பர்கள்

# 4 இலட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை

## பண்டத்தரிப்பில் சம்பவம்

(மானிப்பாய்)

யாழ். பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள வீடொன்றில் 4 இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது ,

யாழ். பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள குறித்த வீட்டில் எவரும் இல்லாத தருணம் பார்த்து வீட்டின் கூரையைப்பிரித்து திருடர்கள் உள்நுழைந்துள்ளனர்.

இவ்வாறாக உள்நுழைந்த திருடர்கள் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் அத்தோடு மடிக்கணனி, வீட்டு உபகரணங்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் .

வீட்டு உரிமையாளர்கள் [illegible] வினர் வீட்டிற்கு சென்று [illegible] திரும்பியபோதே திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதை அறிந்தனர்.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரினால் 4இலட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாக இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களின் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் ஏற்பா ட்டில் ஊடகவியல் நூல்களின் அறிமுக விழா-01 நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இடம்பெறும். (அ-2)

# சந்திரிகா- மங்கள இரகசிய பேச்சு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் இரகசியமான அரசியல் சந்திப் பொன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் கடந்த 13 ஆம் திகதி இச் சந்திப்பு நடை பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

சுமார் ஒரு மணி நேரம் இந்த சந்திப்பு இடம்பெற்றதுடன், இதன் பின்னர் இருவரும் அந்த ஹோட்டலின் இரவு உணவையும் உட்கொண்டனர்.

அங்கு என்ன பேசப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

மொரட்டுவ பொல்கொட ஆற்றுக்கு அருகில் இருக்கும் மங்கள சமர வீரவின் வீட்டில் முன்னாள் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையாக 13 ஆம் திகதி மேற்படி சந்திப்பு இடம்பெற்றிருக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. (அ-2)


## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச.-கிளிநொச்சி பதவி வெற்றிடங்கள்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01.பதவி- போக்குவரத்து உத்தியோகத்தர்-204/13
சம்பளத்திட்டம்- 9950-11700 / 85X10-90X10

**தகைமைகள்:-**

அ). கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் போக்குவரத்து சேவை தொடர்பான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

ஆ). க.பொ.த. சாதாரண தரம்/தே.க.பொ.த. பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத எண்கணிதம்/ வர்த்த எண்கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கி 04 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் போக்குவரத்து தொடர்புடைய கடமையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

02.பதவி- சாரதி-312/13
சம்பளத்திட்டம்- 9950-11700 / 85X10- 90X10

**தகைமைகள்:-**

அ). 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

03.பதவி- சாரதி-312/14
சம்பளத்திட்டம்- 9700-11350 / 80X10-85X10

**தகைமைகள்:-**

அ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

- வயதெல்லை:- 18-45 (சங்கப்பணியாளருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)
- விண்ணப்ப முடிவுத்திகதி:- 28.02.2014

**ஏனைய விபரங்கள்:-**

- இப்பதவிகளுக்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய அடிப்படைச் சம்பளத்தின் 15% விசேடபடி, வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 5,850.00 மற்றும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ், சேவைத்தகைமைச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து, தலைவர், கரைச்சி தெற்கு ப்.நோ.கூ.சங்கம், கனகபுரம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதவுத்தபாலிலோ அல்லது நேரிலோ 28.02.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

திகதி: 12.02.2014

தலைவர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(சி-6484)



வெளிவந்து விற்பனையாகின்றது
தரம் 3,4,5 மாணவர்களுக்கான
புலமை ஆசான்
புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்
ஆசிரியர் ப.சசிரதன்
விலை- 490/-
கிடைக்குமிடம்
பாலவிநாயகர் புத்தகசாலை,
கனகபுரம்- கிளிநொச்சி.
தொ.பே.இல. 0779589317
0775886990
(சி-6536)



## இலங்கை நூலகச் சங்கம்
## நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் - I-2014
## நேர்முகத் தேர்வு + Walk-in Interview

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் -I இற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் அமைந்துள்ள பௌதீகவியல் துறை விரிவுரை மண்டபத்தில் 22.02.2014 (சனிக்கிழமை) காலை 9.30 மணி- மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

**தகைமைகள்:**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற பட்டம்

**அல்லது**

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன்
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றுள் மொழியில் திறமைச் சித்தியும் கணிதம்/ தூயகணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

மொழி மூலம்: தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)
கற்கைநெறிக் கட்டணம்: ரூபா 12,500.00
விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

குறிப்பு:
இக்கற்கைநெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத்தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றமுடியும்.

- தேசிய அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
- விவாகப் பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு)
- கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
- சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது)

கலாநிதி (திருமதி) கல்பனா சந்திரசேகர், [illegible]
யாழ். நிலையம், இலங்கை நூலகச் சங்கம்.

(5619)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 62.75 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: NCT Civil / TO
தொ.இ: B/2801

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 30.25 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / வியாபாரம்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/2803

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 21.75 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / சொந்த வாகன சாரதி, வியாபாரம்
தொ.இ: B/2804

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 16.05 செவ் 12 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSc / Car Company (UK – PR)
தொ.இ: B/2805

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 42.05 சூரி செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/2802

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 28
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/2807

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 45.25 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L / எழுதுவினைஞர் (தனியார்)
தொ.இ: G/2808

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 8 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L / காசாளர் (தனியார்)
தொ.இ: G/2809

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடு வெட்டுவதை நிறுத்தாவிடில் சிங்களவர் உயிரை மாய்ப்பர்

## சிங்கள ராவய எச்சரிக்கை

மாடுகளை அறுத்து கொலை செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். சிங்கள மற்றும் தமிழ் தொன்மையினை கொச்சைப்படுத்தும் இழிசெயலுக்கு இலங்கையில் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. மாடு வெட்டுவதை உடனடியாக நிறுத்தாவிடின் பல நூற்றுக் கணக்கான சிங்களவர் உயிர்த்தியாகம் செய்வர் என்று சிங்கள ராவய அமைப்பு எச்சரித்துள்ளது.

மாடு வெட்டுவதற்கு எதிராக சிங்கள ராவய அமைப்பு கடந்த 9 ஆம் திகதி கண்டி தலதாமாளிகைக்கு முன்பிருந்து கொழும்பு வரையிலான பாத யாத்திரையினை ஆரம்பித்திருந்தது. இதன் இறுதிக்கட்டமாக நேற்று முன்தினம் கொழும்பில் சிங்கள ராவய அமைப்பினர் தமது பாத யாத்திரையினை முடிவிற்குக் கொணடு வந்தனர்.

இதன்போதே இப் பௌத்த அமைப்பினால் மேற்கண்டவாறு கருத்து தெரிவிக்கப்பட்டது. இதன் போது கருத்து தெரிவித்த சிங்கள ராவய பௌத்த அமைப்பின் தலைவர் ஹக்மீமன தயாரத்ன தேரர் குறிப்பிடுகையில்,

இலங்கையில் இன்று பாவச் செயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இலங்கையின் தொன்மையான சிங்கள பண்புகளையும் தமிழர் மதப் பண்புகளையும் அழித்து எம்மை கொச்சைப்படுத்தும் வகையில் இன்று அந்நிய மதத்தவர் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

குறிப்பாக நாட்டில் மாடு வெட்டுவதென்பது மிகப்பெரிய பாவச் செயலாகும். அதனையே இன்று இந்த நாட்டில் செய்து வருகின்றனர்.

மாடுகளை அறுத்து கொலை செய்யும் பாவச் செயலினை உடனடியாக நிறுத்தாவிடின் இதற்காக கடுமையான விளைவுகளை பலர் சந்திக்க வேண்டியிருக்கும்.

இவ் விடயத்தில் பொறுமையாக வட்டமேசைகளில் அமர்ந்திருந்து பேச்சு வார்த்தைகளை நடத்தவோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மகஜர் கையளித்து இது தொடர்பில் பேசவோ நாம் தயாராக இல்லை. எமக்கு வேண்டியதெல்லாம் இப்பாவச்செயலை உடனடியாக நிறுத்த வேண்டுமென்பது மட்டுமே.

கடந்த ஆண்டு மாடு அறுப்பதனை தடுக்கக் கோரி எமது தேரர் ஒருவர் தன்னை தானே தீ மூட்டி உயிர்த்தியாகம் செய்து நாட்டிற்கே பாரிய எச்சரிக்கையினை விட்டார்.

அதே பாணியினையே நாமும் கையாள்வோம். உடனடியாக இவற்றினை நிறுத்தாவிடின் எமது உயிர்த்தியாகத்தின் மூலமாவது அரசாங்கத்திற்கு பலத்த கோரிக்கையினை விடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நேற்று முன்தினம் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது சிங்கள ராவய அமைப்பைச் சேர்ந்த அதிகளவிலான பௌத்த பிக்குமார்களும் ஆதரவாளர்களும் பதாகைகளையும் கோஷங்களையும் எழுப்பி எதிர்ப்பு பாதயாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# இலங்கையுடன் எப்போதும் இணைந்தே செயற்படுவோம்

## அவுஸ்திரேலியா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானம், சுபட்சம், ஸ்திரப்பாடு பாதுகாப்பு விடயங்களில் இலங்கை அரசுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படவுள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையுடனான நீண்ட கால உறவுகள் தொடர்பாக அவுஸ்திரேலிய அரசு பெருமிதம் கொள்வதாக வெளியுறவுகள் அமைச்சர் ஜூலி பிஹொப் கன்பெராவில் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்தார்.


விளையாட்டு, வர்த்தகம், முதலீடு, உல்லாச பிரயாணம், கல்வித் துறைகளில் இரு நாடுகளும் வரலாற்று தொடர்புகளைக் கொண்டவை. பொதுநலவாய மாநாட்டில் தானும் பிரதமர் டோனி எபொட்டும் பங்குபற்றுவதை மகிழ்வாகக் கொண்டோம்.

இலங்கையில் வாடும் சகலரின் வாழ்வையும் மேம்படுத்த நாம் மீள் உறுதி பூண்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

30 வருட யுத்தத்தை இலங்கை எதிர்கொண்டது. இதனால் அழிவுகளும் ஏற்பட்டன. கற்ற பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்க இலங்கை அரசை தாம் வற்புறுத்தியுள்ளோம்.

இலங்கையை தனிமைப்படுத்துங்கள் என்று கூறுபவர்களுக்கு "இலங்கையுடன் இணைந்து கொள்ளுங்கள்" என்றே நான் கூறுகின்றேன. வட பகுதிக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்த அவுஸ்திரேலிய பாராளுமன்ற தூதுக்குழுவிலும் நான் இடம்பெற்றிருந்தேன்.

மீள்குடியேற்றம், மீள் நிர்மாண விடயங்கள் நிறைய நடைபெற்றுள்ளன. நீங்கள் விமர்சிக்கலாம். ஆனால் நல்லவை நடந்துள்ளதை நீங்கள் அங்கீகரிக்கவே வேண்டும். இலங்கைக்கு சுபீட்சமான எதிர்காலம் உண்டு என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)



வலி.தென்மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வார நிகழ்வில் மானிப்பாயைச்சேர்ந்த தேசமானி லயன் எஸ்.ஜே.செல்வராஜா அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சமாதான செயற்பாடுகள் மற்றும் சமூக சேவைகளுக்கான உயரிய விருதுகளான சாமசிறி, சமூகஜோதி, தேசகீர்த்தி ஆகிய விருதுகள் பெற்றமைக்காக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் பதில் தவிசாளர் ச.சிவக்குமார் ஆகியோரால் பொன்னாடை போர்த்தி வாழ்த்து மடல் வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# சம்பந்தனும் ஹக்கீமும் நாட்டை சீரழிக்கவே முயற்சிக்கின்றனர்

## தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானத்தினை வலுப்படுத்தும் செயற்பாடுகள் நாட்டில் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நவநீதம்பிள்ளையின் அறிக்கை தயாரிக்கப்படுகின்றமைக்கு கூட்டமைப்பினரும் ரவூப் ஹக்கீமுமே பிரதான காரணமாகும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் சபைத் தலைவர் மொஹமட் முசம்மில் தெரிவித்துள்ளார்.

அரசியல் சுய நலத்திற்காக நாட்டை காட்டிக் கொடுக்கக்கூடாது. இந்த அரசாங்கத்தின் ஆட்சி மாறாத வரைக்கும் இலங்கை பாதுகாப்பாகவே இருக்கும் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய சுதந்திர முன்னணியினால் நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச விசாரணையினை இலங்கை மீது மேற்கொள்வதற்கான ஜெனீவா தீர்மானத்தினை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் இலங்கையினை காட்டிக் கொடுத்து அதன் மூலம் அரசாங்கமொன்றினை அமைக்கவே திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக இன்று வடக்கில் காணாமற் போனோரின் உறவுகள் என்ற பெயரில் பொய்ச் சாட்சியங்களை வழங்கவும் சர்வதேசத் திடம் பொய்யான அறிக்கையினை சமர்ப்பிக்கவுமே பிரிவினைவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து இயங்கி வருகின்றனர்.

ஜெனீவா தீர்மானம் தொடர்பில் சர்வதேச அளவில் தலையீடுகள் ஏற்படுவதற்கும் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அழுத்தமும் ரவூப் ஹக்கீமின் பொய்யான அறிக்கைகளுமே காரணம்.

இன்று சம்பந்தன், ஹக்கீம் ஆகியோர் கூட்டாக ஒன்றிணைந்து மக்களை ஏமாற்றுவது மட்டுமன்றி நாட்டையும் சீரழிக்கவே முயற்சிக்கின்றனர்.

சர்வதேச தலையீடுகளை இலங்கை மீது ஏற்படுத்தி இலங்கை மீது பொருளாதாரத்தடையினை ஏற்படுத்தவே அனைத்து தீவிரவாத சக்திகளும் முயற்சிக்கின்றன.

இன்று அரசியல் பிரச்சினைகளையும் தனிப்பட்ட விரோதங்களையும் மனதில் வைத்துக் கொண்டு காட்டிக் கொடுக்கக்கூடாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினை கவிழ்த்து எதிர்க்கட்சிகளின் அரசாங்கம் உருவாக்கப்பட்டால் சர்வதேச தலையீடுகள் நேரடியாகவே ஏற்படுத்தப்படும்.

இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் வரையிலேயே நாட்டையும் மக்களையும் பாதுகாக்க முடியும். மக்கள் இதனை சரியாக புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)


**காணி/ வீடு விற்பனைக்கு**

| | |
|---|---|
| காணி/ வீடு விற்பனைக்கு<br>**கொக்குவில்**<br>கொக்குவிலில் 2 பரப்பு காணி சகல வசதிகளுடனும் கூடிய வீட்டுடன் (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.<br>(A/001) | காணி/ வீடு விற்பனைக்கு<br>**சங்கானை**<br>சங்கானை பிரதான வீதியில் 5 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.<br>(A/002) |
| காணி/ வீடு விற்பனைக்கு<br>**கோண்டாவில்**<br>கோண்டாவில் (வடக்கு) இல்9 பரப்பு 6.94 குளி காணி சகல வசதிகளுடன் கூடிய வீடு (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.<br>(A/003) | காணி விற்பனைக்கு<br>**யாழ்ப்பாணம்**<br>யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 8 குளி காணி (கிணறு , பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.<br>(A/004) |
| காணி/ வீடு தேவை<br>**நல்லூர்**<br>நல்லூர், கந்தர்மடம், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் காணி/ வீடு விற்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.<br>(B/001) | **றியல் எஸ்ரேற்**<br>இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளை யார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில் |

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30, 1.30- 5.00 மணிவரை

வெள்ளிக்கிழமை விடுமுறை.


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08.11.1947

உதிர்வு 11.03.2012

**அமரர் தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்**

(எழுத்தாளர், ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், கல்வித் திணைக்களம்)

ஆனந்தமாய் வாழ்வு விருட்சத்தை
அவனியிலே வளர்த்து
தேனமுதச் சாரலாலே எமை நனைத்து
தீ'தில்லா தென்றலென வானத்தில் நிதம் உலாவி
கானமாய் இலக்கியத்தை கடைசிவரை கைக்கொண்டு
ஊனம் அற்ற ஒரு வாழ்வை உத்தமராய் தான் வாழ்ந்து
மௌனமாய் கொள்கைகளை மேன்மையுடன் தான் வரித்து
பானமாய் நாம் அருந்த பாங்கான வாழ்வளித்த
மானத்து மற மணியே தானமாய் நீ போனாய்
தினம் ஏங்கித் துடிக்கின்றோம்.

5610

கொற்றன்தறை, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.

நினைவுகளுடன் மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 குடும்பங்களுக்கு மின்சாரம் இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்திலுள்ள 22 குடும்பங்களுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லையென மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி கிராமத்திற்கு 2 வருடங்களுக்கு முன்னர் மின் விநியோகம் ஏற்படுத்தப்பட்டது.

இதன்படி அங்குள்ள அனைத்து மக்களுக்கும் மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் அம்பாள்குளம் பழைய சந்தைக்கு அருகாமையிலுள்ள 22 குடும்பங்களுக்கு மட்டும் இவ் வசதி பெற்றுக் கொடுக்கவில்லை.

இவ்வாறாக தம்மை ஏன் மின் விநியோகத் திட்டத்தில் புறக்கணித்து வருவதாக மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். எனவே சம்பந்தப்பட்டோர் மின்சாரத்தை பெற்றுத் தர வேண்டுகோள்விடுத்துள்ளனர். (அ-9-271)




# இராணுவத்தின் சட்டவிரோத மண்அகழ்வு நிறுத்தப்பட்டது

(குருமன்காடு)

செம்மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத மண் அகழ்வை வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தலையிட்டு தடுத்து நிறுத்தியதுடன், குறித்த பகுதியில் மண் அகழ்வு செய்யப்படுதல் சட்டத்திற்கு புறம்பானது என்பதை தெளிவுபடுத்தி அவர்களைக் கொண்டு மண் அகழ்ந்த கிடங்குகளை மூடவைத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இராணுவத்தினரால் செம்மலைப்பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையும் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றது.

இவ்வாறாக இடம்பெற்ற மண் அகழ்வை அப்பகுதி மக்கள் தடுக்க முனைந்தும் அது பயனளிக்காத நிலையில் மேற்படி உறுப்பினரிடம் மக்கள் தொலைபேசி ஊடாக முறையிட்டனர்.



இதையடுத்து அப்பகுதிக்கு சென்ற அவர் அங்கு மணல் ஏற்றிக்கொண்டிருந்த இராணுவத்தினரைக்கண்டு இது பற்றி வினவிய போது படை முகாமிற்காக மண அகழ்ந்ததாக கூறியதாக தெரிய வருகின்றது.

அவ்வேளை மணல் ஏற்றுவதற்கு முன்னர் உரிய இடத்தில் அனுமதி பெறவேண்டும் எனவும் மக்கள் குடியிருப்புகள் மற்றும் பாதைகளுக்கு அண்மையில் மண் அகழ்வது அப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் இயல்பு நிலையை வெகுவாக பாதிக்கும் என விளக்கி மேற்படி மண் அகழ்வினை தடுத்து நிறுத்தியதுடன், அவர்களைக் கொண்டே மண் அகழ்ந்த கிடங்குகளை மூடவைத்துள்ளார்.

அத்தோடு அங்கிருந்தே கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்படி மண் அகழ்வு பற்றி அறிவித்து இவ்வாறான சட்டவிரோத மண் அகழ்வுகளில் ஈடுபட வேண்டாம் என்பதை ஏனைய அதிகாரிகளுக்கும் அறிவிக்கும்படி தெரிவித்துள்ளார். (அ-9-250)

## திருமண பந்தத்தில் புதிதாக இணைபவர்கள் சட்ட ஆவணங்களைப்பெற வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது திருமணம் செய்பவர்கள் சட்ட ஆவணங்களை மீள்பதிவு செய்வது தொடர்பில் தெளிவில்லாமல் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புதிதாக திருமணம் செய்பவர்களில் பலர் திருமணப் பதிவை மேற்கொள்ளாமல் இருப்பதனால் அவர்களுடைய குழந்தைக்கான பிறப்புச்சான்றிதழ் பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு தேசிய அடையாள அட்டை மாற்றம், குடும்பப் பதிவு அட்டைகளை புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளையும் இவர்கள் மேற்கொள்ளாமல் இருக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ளதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டோர் கிராம மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-9-263)








தமிழ்த் தேசிய முன்னணியின் 4 ஆவது வருட பொதுக்கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின் திருவுருவப்படத்திற்கு தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் மலர் மாலை அணிவிப்பதையும் கட்சி உறுப்பினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# இழுபறி நிலையிலிருந்த பொதுச் சந்தை திறப்பு

(குருமன்காடு)

இழுபறி நிலையிலிருந்த மந்துவில் பொதுச் சந்தையை வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்துள்ளார்.

மந்துவில் மற்றும் ஆனந்தபுரம் பகுதி மக்கள் காய்கறி பயிர்ச் செய்கையை தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மக்கள் தமது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழுள்ள "மந்துவில் பொதுச்சந்தை" யைநாடுகின்றனர்.

சந்தை தற்போது மீள்நிர்மாணம் செய்யப்பட்டு பலமுறை விடுக்கப்பட்ட கேள்வி கோரல்களின் போது, சந்தையை குத்தகை அடிப்படையில் எடுத்து நடத்த எவரும் விருப்பம் தெரிவிக்காமையினால் குறித்த பொதுச் சந்தை கட்டடம் புதுக்குடியிருப்பு பிரதேசசபையால் நீண்டகாலமாக மக்களின் பயன் பாட்டுக்கு விடப்படாமல் இருந்து வந்தது.

அப்பகுதி மக்களுக்கும் வடமாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகனுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போது, மந்துவில் பொதுச் சந்தையின் இழுபறி நிலை பற்றியும், அதனால் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றியும் குறித்த பொதுச் சந்தையை தமது வியாபார நடவடிக்கைகளுக்காக திறந்து தருமாறும் வலியுறுத்தியிருந்தனர்.

இதனையடுத்து மந்துவில் பொதுச சந்தையின் நிலவரம் தொடர்பில் மந்துவில் கிராம அபிவிருத்தி சங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் என்பவற்றுடன் கல[illegible] கடந்த 14 ஆம் திகதி [illegible] பொதுச்சந்தையை திறந்து வைத்தார்.

வடமாகாணசபை உறுப்பினர்கள கனகசுந்தரசுவாமி, மேரி கமலா குணசீலன் ஆகியோருடன் இணைந்து சிவமோகன் நாடாவை வெட்டி பொதுச் சந்தையை மக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்ததோடு, முதல் வாடிக்கையாளராக வியாபாரிகளிடமிருந்து மரக்கறிகளை கொள்வனவு செய்து சந்தை வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்துள்ளார். (அ-9-250)

# த.தே.மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழு தெரிவு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 ஆவது வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியா நகரசபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமை தாங்கினார்.

அடுத்து கட்சியின் வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கை கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரனினால் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்சியின் புதிய நிர்வாக சபை தெரிவு இடம் பெற்றது.

இதன்பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2014 ஆம் ஆண்டுக்கான மத்திய செயற்குழு விபரத்தின்படி: தலைவராக - கஜேந்திரகுமார் பென்னம்பலம், பொதுச் செயலாளராக- செல்வராசா கஜேந்திரன், துணைப் பொதுச் செயலாளராக- சந்திரசேகரன் மணிசேகரன், பொருளாளராக- கனகையா கிருஸ்ண குமார், தேசிய அமைப்பாளராக- விஸ்வலிங்கம் மணிவண்ணன், பிரசாரச் செயலாளராக- சிவகுரு இளங்கோ, உப தலைவர்களாக- இ.எ.ஆனந்தராஜா, வி.இந்திராணி, சிவபாதம் கஜேந்திரகுமார், வி.றமணன், த.சுரேஸ்,உப செயலாளராக- தங்கராஜா காண்டீபன், உபபெருளாளராக- முத்துலிங்கம் கஜேந் திரராஜா, நிர்வாகச் செயலாளராக- செல்வி ம்டோனா சந்தியோகு, இளையோர் அணித்தலைவராக- இன்னாசிமுத்து சத்தியசீலன், மகளர் அணிப் பொறுப்பாளராக-திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தெரிவாகினர். (அ-2)

## பழங்களுக்கு மருந்து விசிறுவதை நிறுத்துங்கள்

கிளிநொச்சி பொதுச் சந்தையிலுள்ள பழக்கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பழங்களில் மருந்து விசிறப்படுவதை தடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பழங்களை பழுக்க வைப்பதற்காக மருந்துகள் விசிறப்படுகின்றன. இவை சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிப்பதோடு, மக்களுக்கு நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, யுத்தத்திற்கு முன்னர் சுகாதாரப் பிரிசோதகர்களின் சிபார்சின் படியே பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. அதேபோன்ற நடவடிக்கையை ஏற்படுத்த வேண்டியது அவசியமென மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாக இரத்தினம்

கோபங்கொண்ட அவன் அவளிடம் வம்பு செய்ய, அவள் கூச்சலிட்டாள். ஆனால், அவள் கூக்குரலைக் கேட்க அக்கம்பக்கத்தில் யாருமில்லை. அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சுதேந்திரன் என்ற நாகதேவன் நிராதரவான இந்துவின் மீது மிகவும் பரிதாபப்பட்டு, அந்த இளைஞனின் மீது படமெடுத்து சீறிப்பாய, அவன் பயந்தோடிப் போனான். தனக்கு உதவி செய்த அந்த நாகத்தினை நன்றியுடன் இந்து நோக்க, திடீரென அந்த நாகம் மனிதனாக மாறியது.

அவள்முன் வசீகரமான தோற்றத்துடன் நின்ற சுதேந்திரன், "பெண்ணே! என் பெயர் சுதேந்திரன்! நான் நாகலோகத்தைச் சேர்ந்த நாகதேவன்! என்னிடம் இரத்தினம் உள்ளது. அதன் சக்தியினால்தான் நான் இப்போது மனித உருவம் எடுத்து உன் முன் நிற்கிறேன். "என்னால் அதிக நேரம் மனித உருவில் இருக்க முடியாது. ஆனால் நிரந்தரமாக மனிதனாக மாற முயற்சி செய்வேன். அதுவரை நீ எனக்காகக் காத்திருப்பாயா?" எனக் கேட்க, இந்து சம்மதித்தாள்.

உடனே மட்டிலா மகிழ்ச்சியுற்ற சுதேந்திரன் சுக்ரானந்தர் என்ற முனிவரின் ஆசிரமத்தையடைந்து தன்னுடைய விருப்பத்தை அவரிடம் தெரிவித்தான். சற்று நேரம் யோசித்த முனிவர், "சுதேந்திரா! கடவுள் ஏதாவது ஒரு காரணத்தினால் ஒவ்வொரு ஜீவராசிக்கும் ஒரு குறிப்பிட்ட உருவத்தைத் தந்து இருக்கிறார். நீ நாகலோகத்தைச் சேர்ந்தவன்! அதனால் நீ நாகத்தின் உருவத்தில் இருப்பதுதான் நியாயம் ஆனது. ஆகையால் உன் ஆசையை விட்டுவிடு!" என்றார்.



சுதேந்திரன் இந்துவின் மீது தான் கொண்டுள்ள அன்பைப் பற்றிக் கூறினான். ஆகையால் முனிவர், "அவள் மீதுள்ள உன்னுடைய அன்பு மிக ஆழமானது என்று தெரிந்து கொண்டேன். ஆகவே, நான் உன் ஆசையை கண்டிப்பாக நிறைவேற்ற முயல்கிறேன். என்னுடைய தவ வலிமையினால் நீ இரவு முழுவதும் மனித உருவில் இருப்பாய், இரவு நேரங்களில் நீ பரம்பொருளை தியானித்துத் தவம் செய்து வா! உன் மூலம் பல ஜீவராசிகளுக்கு நன்மை ஏற்படும் விதத்தில் நடந்து கொள். சில நாட்களிலேயே, நீ நிரந்தரமாக மனிதனாக மாறுவாய்!" என்றார்.

அவ்வாறு தவம் புரிந்துவந்த இரவுகளில் ஓரிரவில் அவனுடைய இரத்தினம் திருட்டுப் போயிற்று. அதனால் அவனுடைய சக்திகளை இழந்து அவன் ஒரு சாதாரண நாகம் ஆனான். மிகவும் சக்தி வாய்ந்த அந்த இரத்தினத்தைத் தன்னிடம் இருந்து திருடியவனைப் பழி வாங்குவதற்குத் துடித்தான்.

அந்த நேரம், வேறொரு கிராமத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்த கண்ணன் தன் பழைய நண்பன் ரங்கனைப் பார்க்க விரும்பி கடம்பவனம் வந்தான். ரங்கனை சந்தித்த அவன், நடந்த அனைத்தையும் கூறிவிட்டு, "இன்று நான் நல்ல நிலைமையில் இருக்கிறேன். அந்த நன்றியை நான் மறக்கவில்லை, என்னுடைய செல்வத்தில் பாதியை உனக்குத் தருகிறேன். நீ என்னுடன் வந்துவிடு!" என்றான்.

அதற்கு ரங்கன், "நன்றி கண்ணா! ஆனால், நியாயமாக உழைத்துக் கிடைக்கும் கூலியையே நான் விரும்புகிறேன். ஆகவே, நீ சென்று வா!" என்றான். அதன் பிறகு கண்ணன் தன் ஊர் திரும்பினான். அப்போது வழியில் சுதேந்திரன் கண்களில் கண்ணன் தென்பட்டான். கண்ணனிடம் உள்ள இரத்தினத்தின் சக்தி சுதேந்திரனை ஈர்க்க, உடனே அது தன்னுடையதுதான் என்றும், அதை எடுத்துச் செல்பவனே திருடிச் சென்றவன் என்றும் உணர்ந்த நாகம் மிகுந்த கோபத்துடன் கண்ணனின் மீது சீறிப் பாய்ந்து அவனைக் கொத்தியது. என்ன ஆச்சரியம்? சுதேந்திரன் தானாகவே மனித உருவம் பெற்று நின்றான். அதே சமயம் கண்ணனுக்கு நாகம் தீண்டியும் விஷம் ஏறவில்லை.

(முற்றும்)




- 1229 - புனித உரோம் பேரரசின் மன்னன் இரண்டாம் பிரெடெரிக் எகிப்திய மன்னன் அல்-கமீல் உடன் 10 ஆண்டு போர் நிறுத்தத்துக்கு உடன் பட்டான்.
- 1478 - இங்கிலாந்தின் நான்காம் எட்வேர்ட்டிற்கு எதிராக சதி முயற்சியில் இறங்கியதற்காக அவனது சகோதரன் ஜோர்ஜ் (கிளாரன்ஸ் இளவரசன்) தூக்கிலிடப்பட்டான்.
- 1797 - ட்ரினிடாட் பிரித்தானியர்களிடம் வீழ்ந்தது.
- 1832 - இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிமீன் (meteor) தோன்றியது.
- 1861 - அலபாமாவில் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்கு தலைவரானார்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வில்லியம் ஷேர்மன் தலைமையிலான கூட்டுப் படைகள் தென் கரோலினாவின் மாநில அவையைத் தீயிட்டுக் கொழுத்தினர்.
- 1911 - முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமானது.
- 1929 - முதற்தடவையாக ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டது.
- 1930 - கிளைட் டொம்பா ஜனவரியில் எடுத்த புகைப் படங்களை ஆராய்கையில் புளூட்டோவைக் கண்டுபிடித்தார்.
- 1932 - சீனக் குடியரசிடம் இருந்து மனசூகுவோவின் விடுதலையை ஜப்பான் மன்னர் அறிவித்தார்.
- 1957 - கென்யாவின் போராளித் தலைவர் டெடான் கிமாத்தி பிரித்தானிய குடியேற்ற அரசினால் தூக்கிலிடப்பட்டார்.
- 1959 - நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1965 - சாம்பியா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1979 - தெற்கு அல்ஜீரியாவில் சகாரா பாலைவனத்தில் முதற் தடவையாக பனி மழை பெய்தது.

பிறப்புகள்

- 1745 - வோல்ட்டா, இத்தாலிய இயற்பியலாளர் (இ. 1827)
- 1836 - ஸ்ரீராமகிருஷ்ணர், இந்தியாவின் ஆன்மீகவாதி (இ. 1886)
- 1860 - மா. சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (பி. 1946)
- 1926 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (இ. 2009)
- 1931 - டொனி மொறிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர்.

இறப்புகள்

- 1546 - மாட்டின் லூதர், ஜேர்மனிய சமய சீர்திருத்தவாதி (பி. 1483)
- 1564 - மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய ஓவியர் (பி. 1475)
- 1967 - றொபேட் ஓப்பன்ஹைமர், அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் (பி. 1904)

## ஸ்ரீராமகிருஷ்ணர்



ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் 1836 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி குதிராம் - சந்திரமணி தம்பதியினருக்கு மேற்கு வங்காளத்திலுள்ள கமார்புகூர் எனும் சிறிய கிராமத்தில் பிறந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணன் எனப் பரவலாக அறியப்படும் கதாதர் சாட்டர்ஜி 19ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருவர். இவர் விவேகானந்தரின் குருவாவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

சிறு வயதில் ஆடல் பாடல்களிலும், தெய்வங்களின் படங்கள் வரைவதிலும், களிமண்ணில் சிலைகள் செய்வதிலும் ஆர்வமாயிருந்த கதாதருக்கு கணிதம் பிடிக்காத பாடமாய் இருந்தது. கிராமத்தின் செல்லப் பிள்ளையாக அவர் விளங்கினார்.

சற்று வளர்ந்தவுடன் பள்ளிப்படிப்பு பொருள் ஈட்டுவதையே நோக்கமாக கொண்டிருப்பதாக கருதிய அவர் பள்ளி செல்ல மறுத்தார். இயற்கையை ரசிப்பதிலும், பக்திப் பாடல்கள் பாடுவதிலும், புராணக் கதைகள் கேட்பதிலும், நண்பர்களுடன் விளையாடுவதிலும் பொழுதைக் கழித்தார். சிறு வயதிலேயே ஆன்மீக விடயங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவராயிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தொண்டைப் புற்றுநோய் காரணமாக 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி உயிர் பிரிந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

## ஆன்மீகம் 37

...இங்கு நேர் வடக்காக ஆற்றுக்குள் இறங்கினால் தென்புறம் மலைச் சரிவில் கோரக்கர் குகையும், அதன் நேர் கிழக்கே எக்காலத்திலும் வற்றாத ஒரு பொய்கையும் இருப்பதாகக் கோரக்கர் குறிப்பு தெரிவிப்பதால், அந்த வற்றாத பொய்கையில் குளிப்பதற்காக கிழக்கு நோக்கிச் சென்றோம்.

பாறையின் சரிவில் கோரக்கர் குறிப்பிட்ட வற்றாத பொய்கை தென்பட்டது.

இடுப்பளவு ஆழமுள்ள இந்தச் சின்னப் பொய்கையை அடுத்து அதனினும் சற்று ஆழமான பெரிய பொய்கையும் அங்கு காணப்பட்டது. அந்தப் பொய்கைக்கு மேலே முக்கோண வடிவமுள்ள பாறையிலிருந்து தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

இந்த இரண்டாவது பொய்கையை கோரக்கர் தீர்த்தம் என்று குறிப்பிடுகின்றனர்.

இந்த கோரக்கர் தீர்த்தத்தைப் பற்றி காலாங்கிநாதர் தனது ஞானவித்து ரகசியத்தில்,

உண்டப்பா இன்னுமொரு அதிசயம் தான்

உலகத்திலுள்ளோர்கள் அங்குவந்து

குண்டப்பா கோரக்கர் தீர்த்த மாடிக்

கொள்ளவே எப்பிணியும் அகன்று போகும்.

மண்டப்பா கரம் இரண்டும் ஒன்றாய்க் கூட்டி

வாரிநீர் மூன்று கையுண்ணப் போதை

கொண்டப்பா சென்மசாபல்ய மாகும்

கோரக்கர் தனைப் போற்றக் குண முண்டாமே

என்று கூறுகின்றார்.

உலகத்திலுள்ள மக்கள் இந்தக் கோரக்கர் தீர்த்தில் நீராடி, குண்டா



கோரக்கர் குகை லிங்கங்கள்

விலிருக்கும் நீரில் மூன்று கை அள்ளி உண்டால் சகல பிணிகளும் தீர்ந்து இந்த சென்மம் சாபல்யமாகும் என்றும், கோரக்கரைப் போற்றினால் நிச்சயமாக எல்லா வியாதிகளும் குணமாகும் என்று காலாங்கிநாதர் கூறுவதால், ஆர்வத்தில் கோரக்கர் தீர்த்தத்தில் நீராட முடிவு செய்தோம்.

பெரிய பொய்கையில் நீராட உள்ளே காலை வைத்ததில் நீரின் வேகம் அதிகமாக இருப்பது தெரிந்ததால், அதிக ரிஸ்க் எடுத்துக்கொள்ள விரும்பாமல் சிறிய பொய்கையில் இறங்கினோம். ஆஹா என்ன ஓர் அற்புதமான குளியல்.

ஒரு முங்கு மூழ்கி எழுந்ததும் எங்களைச் சுற்றி சிறிய மீன் கூட்டங்கள் நெருங்கிக் கடிப்பதை உணர்ந்தோம். மீன்கள் கடிப்பது சற்று சங்கடமாக இருந்ததால் அடிக்கடி நெளிய வேண்டி இருந்தது. இதை இங்கு நீராடுபவர் மீன் மசாஜ் என்று வேடிக்கையாகக் குறிப்பிடுகின்றனர். உடலிலுள்ள அழுக்கையெல்லாம் சற்று நேரத்திலேயே பூரணமாகத் தின்று புத்துணர்வை உண்டாக்கி விடுமாம்.

நீண்ட நேரம் குளிக்க ஆசைதான் என்றாலும் மகாலிங்கரைத் தரிசிக்க சீக்கிரம் மலையேற வேண்டுமே. ஆதலால் விரைவிலேயே எங்கள் நீராட்டத்தை முடித்துக் கொண்டு பெரிய பொய்கை நீரை மூன்று கை அள்ளி உண்டு, கோரக்கரை மனதிற்குள் நினைத்தபடி அவர் குகை இருக்கும் திசைநோக்கி கைகூப்பி வணங்கினோம்.

அப்போது சுடசுடவெனத் தூரல் போட்டதால் பொய்கையிலிருந்து பாறைப் பகுதிக்கு மேலேறினோம். நல்ல வேளை, மழை வலுக்கவில்லை. மழைத் துளியில் பாறைகள் முற்றிலுமாக நனைந்து விட்டிருந்தன. ஆனால் அந்த ஈரத்தில் காலை வைத்தபோது வழுக்க ஆரம்பித்தது.


இந்த வழுக்கலில் பாறைச் சரிவை எப்படிக் கடப்பது என்று யோசித்தபோது அடுத்த சில நொடிகளில் சுள்ளென்று காய்ந்த வெயிலின் தகிப்பில் பாறை காய ஆரம்பித்தது. சரிவில் காலை ஊன்றி நடந்து கோரக்கர் குகையை அடைந்தோம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**49**

வாகினி ஸ்டுடியோவில் ஒப்பனை மேதை பீதாம்பரம் (இயக்குநர். பி.வாசுவின் தந்தை) செம்மலுக்கு ஒப்பனை செய்து கொண்டிருந்தார்.

அப்போது சற்று பலமாகக் கதவு தட்டும் சப்தம் கேட்டது.

திறந்தேன். இந்தி நடிகர் ஆஹா நின்று கொண்டிருந்தார்.

"நான் ஆஹா! எம்.ஜி.ஆரைப் பார்க்கணும்" என்றார். செம்மலே பார்த்துவிட்டு அவரை வரச்சொன்னார். அமரச் சொன்னார்.

"பலமுறை வந்தபோது உங்க பேரு தான் எல்லார் நாக்கிலேயும் நட மாடுறதைக் கேட்டேன். மூணு தடவை மதறாஸ் வந்தும் பாக்க முடியலே. இன்னிக்குத்தான் சான்ஸ் கிடச்சு பாத்துட்டேன்" என்றார்.

"எப்படி இருக்கிறது உங்க தொழில்?" என்று செம்மல் கேட்டார்.

"இப்பவெல்லாம் அனுபவம் தொழிலுக்கு ஒரு தடையாச்சு. அதிலும் இந்த காமெடியன்கள் பாடு ரொம்ப மோசம். நான் தொழிலுக்கு வந்த புதுசுலே ஹீரோ. இப்ப காமெடியனா நானூறு படம் நடிச்சும் வாழ்க்கை சூடா இல்லை. டிசம்பர் மாச வெயில் மாதிரி பிலோ டிக்ரி தான்" என்றார்.

"எங்க தமிழ் பீல்டிலேயும் இப்படி மந்தம் இருந்திருக்கு. ஜெமினி இப்ப பெரிய ஹீரோ, அவரு வந்தது வில்லனா. இப்போ பெரிய வில்லன் மனோகர். அப்ப ஹீரோ. நம்பியார், பெரிய வில்லன். ஆரம்பத்தில் காமெடியன்.

காமெடியன் சோத்துக்கு உப்பு,



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், எம்.ஜி.ஆர்

பாலுக்கு சர்க்கரை மாதிரி.... கரைஞ்சுடும். கண்ணுக்கு தெரியாது. ஆனா அது இல்லேன்னா ருசி இல்லே" என்றார் செம்மல்.

"ஆஹா நல்ல விளக்கம் என்று பிரமித்தார்" இந்தி நடிகர் ஆஹா!.

பின்பு... பகல் உணவு வேளையின் போது, ஒரு பாக்கெட் பம்பாய் இனிப்பு வகை கொண்டு வந்து கொடுத்தார்.

"உங்க கிட்டே நிறைய வேலையாள் இருக்கிறதை பார்த்தேன். அவங்க பணிவிலேதான், எஜமான் உயர்வு தெரியும். உங்க பணியாள் யாவரும் பளபளப்பாக இருக்காங்க. அதிலே நீங்க அவுங்களை நடத்துற விதம் தெரியுது.

யூ ஆர் நாட் ய கேப்டலிஸ்ட். ரியல் கம்யூனிஸ்ட். காரணம் உங்க கையிலே வைர மோதிரம், தங்க கடிகாரம் இல்லே. உங்க வேலைக்காரர். (அப்போ இருந்த சபாபதி) கையிலே இருக்கு. இது எனக்குப் போதும். வர்றேன். இன்று எனக்கு மறக்க முடியாத நாள்" என்று உணர்ச்சிப் பெருக்குடன் செம்மலைப் பாராட்டி விட்டுவிடை பெற்றுக் கொண்டார் ஆஹா.

### நாளை நமதே

யாதோன் கி பாராத் என்ற படத்தின் தமிழ்ப் பதிப்பு இந்த படம்.

அரசியல் சூடு பிடித்து, செம்மலை திக்குமுக்காட வைத்த வேளையில் உருவான படம்.

படப்பிடிப்புக்கு எத்தனை நாள் வேண்டுமென்று கேட்டு அந்த நாளைக்குள் முடித்து வெளியிட்ட படம்.

நாளை என்னவாகுமோ என்று கலங்கிய மக்களுக்கு அந்நாள் நமதே என்று நம்பிக்கை தந்த நல்ல படம்.

பிறமொழி வெற்றிப் படங்களைத் தமிழில் திரும்ப எடுக்கும் போது செம்மல் மிகவும் சிந்திப்பார். ஆனால் இந்தப் படத்தை சொன்னதும் ஒப்புக் கொண்டார்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப் புற்றுநோய் வராமல் தடுக்கலாம்!

“உலக அளவில் உயிரிழப்பை ஏற்படுத்தும் புற்றுநோயாக முதல் இடத்தில் மார்பகப் புற்றுநோய் இருக்கிறது. புகையிலைப் பொருட்களால் ஏற்படக்கூடிய புற்றுநோய், ஆண்களுக்கு உயிரிழப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

புகைபிடிப்பது, பான் மசாலா, புகையிலை மெல்லுவது போன்ற செயல்களால், 10 இல் நான்கு பேருக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்படுகிறது. இந்தப் புற்றுநோயால் 42 சதவிகித ஆண்களும், 18 சதவிகிதப் பெண்களும் உயிரிழக்கின்றனர்.

புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு, வாயின் உட்பகுதியில் புண் போல ஆரம்பிக்கும். அது கொஞ்சம் கொஞ்சமாக உதடு, கன்னம், தொண்டை, உணவுக் குழாய் என ஏனைய எல்லாப் பகுதிகளையும் தாக்கி, மிக மோசமான வாய்ப் புற்றுநோயாக உருவெடுத்து விடுகிறது.






சமீபத்தில் பொறியியல் படிக்கும் மாணவர் ஒருவர், என்னிடம் பல் வலி என்று வந்தார். பரிசோதித்ததில், அவருக்கு வாய்ப் புற்றுநோய் இருந்தது. நான்கு ஆண்டுகளாக அவருக்கு, புகைபிடிக்கும் பழக்கம் இருந்திருக்கிறது.

சிலர், “நான் ரொம்ப வருடமா சிகரெட் பிடிக்கி றேன்... எனக்கு எந்த வியாதியும் இல்லை' என்று பெருமையாகச் சொல்லுவார்கள். புற்று நோய் என்பது எப்போதும் வரலாம். புகைக்கும் அளவையும், பான் போடும் அளவையும், நம்முடைய நோய் எதிர்ப்பு ஆற்றலையும் பொருத்துத்தான் நோய் வருவதற்கான வாய்ப்பு அமையும்“ என்றவர், வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்கான வழிகளைச் சொன்னார்.

தினமும் இரண்டு முறை பல் துலக்க வேண்டும். பற்களுக்கு இடையே உள்ள அழுக்கை அகற்ற ஃபிளாஸ் பயன்படுத்த வேண்டும்.

புகையிலை மெல்லுவதை, புகைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். வாயில் சிறிய புண் ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவரின் ஆலோசனை பெற வேண்டும்.

தினசரி உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, புற்று நோய் செல்களை எதிர்த்துப் போராடும்.

மஞ்சள், அடர் பச்சை நிறக் காய்கறிகள், கீரை, பூண்டு, திராட்சை, க்ரீன் டீ, சோயா, தக்காளி போன்ற உணவுகளைச் சாப்பிடுவது புற்றுநோய்க்கான வாய்ப்பைக் குறைக்கும்.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பல் மருத்துவரைச் சந்தித்து வாய் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.


மாதத்துக்கு ஒருமுறை கையடக்கக் கண்ணாடியையவைத்துக் கொண்டு, வீக்கம், புண் போன்று ஏதேனும் உள்ளதா என்று பார்த்து, சந்தேகப்படும்படி இருந்தால், உடனடியாக உங்கள் பல் மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது.

**புற்றுநோய்... பீதி வேண்டாம்!**

““எந்த ஓர் அறிகுறியுமின்றிப் புற்றுநோய் தாக்கும், புற்றுநோயை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது““ என்பது போன்ற தவறான நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் நிலவுகின்றன.

இவற்றைக் களைந்து, புற்றுநோய் தொடர்பான விழிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஒருவருக்கு புற்றுநோய் என்று கண்டறிந்தால், அது அவரது வாழ்க்கையையே புரட்டி எடுத்துவிடுகிறது. அதிர்ச்சி, பயம், கோபம்,



சோகம், தனிமை, மனப்பதற்றம் என்று பல விடயங்கள் அவரைத் தாக்குகின்றன.

குடும்பத்தினர், நண்பர்கள் அவருடன் பேசுவதன் மூலம் இதிலிருந்து அவர் விடுபட முடியும்.

பல வகையான புற்றுநோய்களுக்கு அறிகுறிகள் உள்ளன. இதன் மூலம் ஆரம்ப நிலையி லேயே புற்றுநோயைக் கண்டறிந்து குணப்படுத்த முடியும்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி, மது அருந்தாமல், புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்தாமல் இருப்பது போன்றவற்றின் மூலம் புற்றுநோய்க்கான வாய்ப்பை நம் ஒவ்வொருவராலும் தவிர்க்க முடியும்.

தேசிய, மாநில அளவில் உள்ள ஆட்சியாளர்கள் நினைத்தால், “புகையிலைப் பொருட்களுக்குத் தடை' என்பது போன்ற ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் புற்றுநோய்க்கான வாய்ப்பைக் குறைக்கலாம்.

# புற்றுநோய் காரணமாக 14 ஆயிரம் பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

**இலங்கையில் புற்று நோய்கள் காரணமாக 14 ஆயிரம் பேர் 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் உயிரிழந்திருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

கடந்த ஆண்டில் புற்றுநோய்களால் உயிரிழந்தவர்களில் 2 ஆயிரத்து 500 பேர் வாய்ப்புற்று நோய் காரணமாக மரணமடைந்திருப்பதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. அதேநேரம், புற்றுநோய் சிகிச்சைக்காக கடந்த வருடம் 25 ஆயிரத்து 842 பேர் இந்நாட்டிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் பதிவு செய்துள்ளனர் என்றும் அமைச்சு குறிப்பிட்டிருக்கின்றது.

ஒருவர் ஒரு வெற்றிலைக் கூறை மெல்லும் போது அதில் உள்ளடங்கி இருக்கும் பாக்கும், புகையிலையும் புற்று நோய்க்குத் துணைபுரியக் கூடிய 32 இரசாயனத் திரவங்களை வாயினுள் விடுவிப்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது. இவ்வாறு வாயினுள் விடுவிக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் வாயின் கலங்களினுள் சேர்வதற்கான வாய்ப்பை சுண்ணாம்பு ஏற்படுத்திக் கொடுப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

தற்போது இலங்கையில் 6 வகையான புற்றுநோய்கள் பதிவாகின் றன. அவற்றில் வாய்ப்புற்று நோய், தொணடைக் குழி புற்று நோய், மார்பு புற்று நோய், கருப்பை புற்று நோய், இரைப்பை புற்றுநோய் என்பன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இவற்றில் மூன்று வகையான புற்றுநோய்களுக்கு வெற்றிலைக் கூறு மெல்லுதல், மதுபானம் மற்றும் புகைபிடித்தல் ஆகிய பழக்கங்கள் பாரிய பங்களிப்புச் செய்கின்றன. இப்பழக்கங்களிலிருந்து மக்களை விடுவித்தால் புற்றுநோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையைப் பெரிதும் குறைத்துக் கொள்ள முடியும். அத்தோடு இந்நோய்கள் காரணமாக உயிரிழப்போரின் எண்ணிக்கையும் குறைந்துவிடும்.

அதேநேரம், இந்நாட்டுப் பெண்கள் மத்தியில் பெரிதும் இனம் காணப்படுகின்ற மார்பு புற்றுநோயையும் கருப்பை புற்றுநோயையும் முன்கூட்டியே இனம் கண்டு சிகிச்சை அளித்தால் அவற்றை முழுமையாகக் குணப்படுத்தி விடமுடியும்.

வெற்றிலை மெல்லுதல், புகைபடித்தல் மற்றும் மதுபானப் பாவனை ஆகிய மூன்று பழக்கங்களும் உயிராபத்து மிக்கவை. இப்பழக்க ங்களின் பாதிப்புகளை அறிந்து கொள்ளாத நிலையிலேயே அவற் றுக்குப் பெரும்பாலானோர் உள்ளா கியுள்ளனர். இவை தொடர்பான தெளிவைப் பெற்றுச் செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பு என்றும் அவர் கூறினார். (அ-2)

# நவநீதம்பிள்ளையின் அறிக்கைக்கு அரசாங்கம் பதில் வழங்கியுள்ளது

## ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை கிடைக்கப் பெற்றது என்று ஜெனீவாவிலுள்ள ஐநாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் பதில்களை தயாரிக்க வேண்டும் என்பதற்காக நவநீதம்பிள்ளை அம்மையார் ஜெனீவாவில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையின் நகல் ஒன்று அரசாங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அப்படி வழங்கப்பட்ட அறிக்கையை தாங்கள் காண நேர்ந்ததாகவும் சண்டே டைம்ஸ் கூறுகிறது.

குற்றம்சாட்டப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஒழுங்கான விசாரணை வேண்டும் என்று சர்வதேச சமூகம் திரும்பத் திரும்ப வலியுறுத்தியும் இலங்கை அரசாங்கம் முறையான விசாரணைகளை இத்தனை காலமும் நடத்தாமல் இருந்து வருவதால், சுயாதீன விசாரணை ஒன்றை ஐநா மனித உரிமைகள் கவுன்சில் நடத்த வேண்டும் என்று நவநீதம்பிள்ளை பரிந்துரைப்பதாக அவரது அறிக்கை கூறுகிறது என சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பொறுப்புகூறல் சம்பந்தமான உள்நாட்டளவிலான வழிமுறைகள் இதுவரை காலமும் பலன் அளிக்காதது உண்மையையும், நீதியையும் நிலைநாட்டுவதில் இலங்கையடம் அரசியல் உறுதிப்பாடு இல்லை என்பதையே காட்டுவதாக நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், ஐநா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை கிடைக்கப் பெற்றது என்றும் அதற்கான தமது பதிலை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது எனவும் ஜெனீவாவிலுள்ள ஐநாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க் தெரிவித்துள்ளார். (அ-2)

# 12,800 முன்னாள் போராளிகளுக்கு இதுவரை புனர்வாழ்வளித்தோம்

21 ஆயிரத்து 800 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாடு முழுவதிலும் குண்டுகளை வெடிக்கச் செய்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கே இவ்வாறு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளன.

ஒழுக்கமோ, பொறுமையோ இன்றி செயற்பட்ட 12 ஆயிரத்து 800 முன்னாள் உறுப்பினர்களுக்கும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 9 ஆயிரம் புலி உறுப்பினர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டன. மத வழிபாட்டின் மூலம் கிடைக்கப் பெற்ற அனுபவங்களே புனர்வாழ்வு அளிக்க சக்தியை வழங்கியது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியாவும் சர்வதேசமும் காத்திரமாக செயற்படவேண்டும்

## சுரேஷ் எம்.பி.கோரிக்கை



**13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அமைச்சர் வாசுதேவ அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் இந்தியாவும் சர்வதேசமும் காத்திரமான செயற்பாட்டை உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென பகிரங்கமாக குறிப்பிட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக இந்தியாவிற்கும் ஐ.நாவிற்கும் ஜனாதிபதியும் அரசாங்கமும் வாக்குறுதி அளித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.**

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தயாரில்லையென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளமை தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்த அதிகாரத்தையும் வழங்கத் தயாராக இல்லையென தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே தெரிவித்து வந்துள்ளார்கள்.

இதனை கூட்டமைப்பினராகிய நாமும் பொருத்தமான தருணங்களில் சுட்டிக்காட்ட தவறியிருக்கவில்லை. அதனடிப்படையில் அரசாங்கத்தின் நீண்டகால நிலைப்பாட்டை அதிலுள்ள அமைச்சர் ஒருவரே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் இந்தியாவையும் ஐக்கிய நாடுகள் சபையையும் திருப்திப்படுத்துவதற்காக 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவதாகவும் அதற்கு மேல் (13பிளஸ்) செல்வதாகவும் வாக்குறுதி அளித்திருக்கின்றனர்.

ஆனால் அதனை செயற்படுத்துவதற்கு அவர்கள் என்றுமே தயாராகவில்லை. அதற்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை.

ஜனாதிபதி என்பவர் அரசியல் சாசனத்தில் காணப்படும் சட்டத்தையே முழுமையாக நடை முறைப் படுத்தமுடியாது என மறுதலிக்கக் கூடியவராக காணப்படுகின்றார்.

ஆகவே, இவ்வாறான ஒருவரின் தலைமையில் காணப்படும் அரசிடமிருந்து இனப் பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்க்க முடியாது.

மாகாண சபை முறைமை என்பது சிறுபான்மை மக்களுக்கான பிரச்சினைகளுக்கோ அல்லது இனப் பிரச்சினைக்கான தீர்வாகவோ என்றுமே அமைந்து விடப்போவதில்லையென நாம் பல தடவைகள் கூறியிருந்தும் சிறுபான்மை மக்களுக்கு எந்தவொரு அதிகாரங்களும் சென்று விடக்கூடாது என்றே அரசாங்கம் கருதுகின்றது.

அவ்வாறான நிலையில் இந்தியாவும் சர்வதேசமும் ஜனாதிபதியும் அரசாங்கமும் விரும்பினால் இப் பிரச்சினையை தீர்க்க முடியும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், தீர்வு குறித்து இரு தரப்பினரும் ஆராய வேண்டும் போன்ற இழுபறியான கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்காது காத்திரமான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் சாசனத்தில் கூறப்பட்டிருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்த உடனடியாக அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

இந்தியாவும் சர்வதேசமும் அவ்வாறானதொரு காத்திரமான செயற்பாட்டை முன்னெடுப்பதனூடாகவே தமிழர்கள் தலைநிமிர்ந்து சுதந்திரமாகவும் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் தாயக பிரதேசங்களில் வாழமுடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதற்கான நியாயபூர்வமான விடயங்களையே தமிழ் மக்கள் இந்தியா, சர்வதேசத்திடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜெனீவா செல்லும் குழுவுக்கு பீரிஸ் தலைமை தாங்குவார்



(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கையின் சார்பில் அதிகாரம்மிக்க குழு ஒன்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பு தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பரிஸ் இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கவுள்ளார். அவருடன் மேலும் ஐந்து பேர் ஜெனீவா செல்லவுள்ளனர்.

எனினும் அவர்களின் பெயர்கள இன்னும் அறிவிக்கப்படவில்லை. பெரும்பாலும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்தக் குழுவில் இடம்பெறுவார் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.

அதேபோன்று வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, வெளியுறவு அமைச்சின் செயலாளர் சேனுகா செனவிரட்ன, சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்கியிருப்பர் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.


இந்த அமர்வின்போது அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ"க்கு 20 நிமிட உரைக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பீரிஸ் இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கவுள்ளமையால் இதுவரை காலமும் ஜெனீவா மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர் மஹிந்த சமரசிங்க குழுவில் இருந்து நீக்கபபட்டுள்ளமை தெளிவாகியுள்ளதாக அரசாங்க தரப்பு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் சார்பு நாடுகள் இலங்கைக்கு எதிராக கொண்டு வரவுள்ள பிரேரணை மார்ச் மாதம் 3 ஆம் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந் நிலையில் பீரிஸ் அமெரிக்காவின் பிரேரணைக்கு இலங்கையின் முழு எதிர்ப்பை வெளியிடவுள்ளதுடன், நல்லிணக்க நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் விபரிக்கவுள்ளார். (அ-2)

# சிவபெருமான் சிலையை வடிவமைத்த சிற்பிக்கு விருது வழங்கப்பட்டது



(மாதகல்)

மாதகல்-சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்தில் சிவதொண்டர் அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட சிவபெருமானின் 21 அடி உயரமான தியான திருச்சொரூபத்தினை வடிவமைத்த சிற்பி உதயகுமார் கஜேந்திரனுக்கு சிவதொண்டர் அமைப்பு "சிவசிற்ப வாரிதி" என்ற விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

சம்புநாத ஈஸ்வரத்தில் இவர் சிவபெருமானின் தியான சிலையை வடிவமைத்தமைக்காக கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற குடமுழுக்கின்போது இவருக்கு சிவதொண்டர் அமைப்பால் வழங்கப்பட்ட **சிவசிற்ப வாரிதி** என்ற விருதை, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளும் சம்புநாத ஈஸ்வர குரு நரசிங்க சித்தர் சுவாமிகளும் இணைந்து வழங்கி கௌரவித்தனர். (அ-2)



வவுனியா விவசாய விரிவாக்கல் பிரிவினரால் பயிர்ச் சிகிச்சை முகாம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நோய்த்தாக்கத்திற்குள்ளான பயிர்களுடன் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நோய்த் தாக்கம் தொடர்பில் விளக்கம் அளிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு

## நேற்று ஆரம்பம்

சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் 35 ஆவது மாநாடு மாலைதீவில் நேற்று ஆரம்பமானது

இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி அமைச்சர் ஜீ.எல்.பிரீஸ் இந்த மாநாட்டில் பங் கேற்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

வலய ஒத்துழைப்பு, உணவுப் பாதுகாப்பு, சூழல் மற்றும் கல்வி நிதி விவகாரங்கள் தொடர்பில் சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளன.

ஆரம்பமாகியுள்ள சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு எதர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக வெளிவிவ கார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# சர்வதேச விசாரணையை தடுத்துவிடுமா அரசாங்கம்?

கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த, போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து முறையான நம்பகமான- சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அடுத்தமாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்த விவகாரத்தை முன்னிலைப் படுத்தி, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரத் தயாராகி வருகிறது. அமெரிக்காவின் இந்த முயற்சியை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாவிட்டாலும் இதனை முற்றிலுமாக நிராகரிக்கவும் முடியாத கட்டத்துக்குள் அரசாங்கம் தள்ளிவிடப்பட்டுள்ளது. ஏனென்றால் இதுவரையில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகினாலும்சரி, ஐ.நா மனித உரிமைகள் பேரவையினாலும்சரி, இந்த மீறல்கள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை நடத்தவே அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திரமான நம்பகமான- உள்ளக விசாரணைகளை மேற்கொள்வதற்கே அரசாங்கம் தயாராக இல்லாத நிலையில், வரப்போகும் ஜெனிவா கூட்டத் தொடரில், போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவான குரல்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கான சர்வதேச பொறிமுறையை உருவாக்க வலியுறுத்தி, அமெரிக்க செனெட் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு, இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவு தெரிவித்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார பேரவையினால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவு தெரிவித்து அவுஸ்திரேலிய செனெட்டில் கிறீன் கட்சியினால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் ஆகியன இந்த நகர்வுகளில் முக்கியமானவையாகும்.

ஏற்கனவே, கனடாவும், பிரித்தானியாவும், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உறுதியான ஆதரவைத் தெரிவித்துவிட்டன. இந்த நிலையில் அமெரிக்க செனெட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு, ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், அவுஸ்திரேலிய செனெட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் என்பன சர்வதேச போர்க்குற்ற விசாரணை அழைப்புக்கான ஆதரவு உலகில் அதிகரித்து வருவதை வெளிப்படுத்தியுள்ளது. இது ஆரம்பத்தில் இருந்தே,



சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி வரும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் தமிழர் தரப்புக்கு உற்சாகம் தரும் ஒரு விடயமே. இதில் அவுஸ்திரேலிய செனெட்டில் தீர்மானம் நிறைவேற்றினாலும் அதனை அந்த நாட்டில் ஆட்சியில் உள்ள ரொனி அபோட் அரசாங்கம் ஏற்றுச் செயற்படவேண்டிய கடப்பாடு கிடையாது. அவுஸ்திரேலிய அரசாங்கம் படகு அகதிகளை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதிலேயே கவனம் செலுத்துகிறதே அன்றி முடிந்துபோன போரின் மீறல்களைப்பற்றியெல்லாம் அதற்குக் கவலையில்லை.

அதுபோலவே அவுஸ்திரேலியாவின் இந்த நிலைப்பாட்டினால் ஜெனிவாத்தீர்மானத்துக்குப் பெரிதாக எந்தப்பாதிப்பும் வந்துவிடப்போவதுமில்லை. ஏனென்றால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் தகைமைபெற்ற உறுப்பு நாடாக அவுஸ்திரேலியா இல்லை. சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவளிக்க அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலிபிஷப் மறுப்புத் தெரிவித்திருந்தாலும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் மீது அதனால் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவோ, இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றவோ முடியாது.

அதேவேளை, இந்திய நாடாளுமன்றத்தில் கூட சர்வதேச போர்க் குற்றவிசாரணைக்கு ஆதரவான தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்படவேண்டும் என்று குரல்கள் எழுந்தாலும் அதற்கான சூழல் இருப்பதாகத் தெரியவில்லை. சில வேளைகளில் தமிழ் நாட்டில் வாக்கு பலம், கூட்டணி பலம் என்பன அத்தகையதொரு தீர்மானம் இந்திய நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கலாம். என்றாலும் தெலுங்கானா விவகாரத்தில் இந்திய நாடாளுமன்றத்தில் நடக்கும்போர் இத்தகைய தீர்மானங்களைக் கொண்டுவரும் சூழலுக்குத் தடையாகவே உள்ளது. இந்திய நாடாளுமன்றத்தில் சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றும் நிலை ஒன்று உருவாகுமேயானால் அது சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்கிடையே இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை விவகாரம் இந்தளவுக்கு தீவிரம் பெற்றதே அரசாங்கத்தின் முறையற்ற நடவடிக்கையினால்தான் என்ற குற்றச்சாட்டு உள்நாட்டில் தீவிரமடைந்து வருகின்றது. எதிர்க்கட்சியான ஐ.தே.க. கூட உள்ளக விசாரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இதனைச் செய்யத் தவறியதால்தான் ஜெனிவாவில் நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.தே.க. குற்றம் சுமத்தியுள்ளது. பிரதான எதிர்க் கட்சியையே தனது நிலைப்பாட்டிற்கு ஆதரவாக கொண்டு வரமுடியாத அரசாங்கம் ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் கதவுகளையெல்லாம் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் தட்டிக் கொண்டிருக்கின்றனர். மேற்கே பிறேசிலிடம் போய் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆதரவு கோரியிருந்தார். இப்போது கிழக்கே தென்கொரியாவின் ஆதரவு கோரி பசில் ராஜபக்ச சென்றுள்ளார். உலகம் முழுவதும் இலங்கைக்கு ஆதரவு திரட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் முழுவீச்சில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஜப்பான், தென்ஆபிரிக்கா, பிறேசில் இந்த மூன்று நாடுகளையும் மடக்கிப் போடுவதன் மூலம் கணிசமான ஆதரவைத் திரட்டலாம் என்று அரசாங்கம் கணக்குப்போட்டுள்ளது. தென்னாபிரிக்காவை வைத்து ஆபிரிக்க நாடுகளையும், பிறேசிலை வைத்து இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் ஆதரவாக திருப்பும் அரசாங்கத்தின் முயற்சியின் பலன் என்னவென்று வரும் மார்ச் 28 ஆம் திகதியே தெரியவரும்.

இதற்குள் சில நகைச்சுவையான சம்பவங்களும் நடந்தேறுகின்றன.

கடந்த வாரம் ஈரானிய ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனியின் சிறப்புத் தூதுவர் ஆயத்துல்லாஹ் காஸி அஸ்கர், கொழும்பு வந்து கூட்டம் ஒன்றில் உரையாற்றியிருந்தார். அவர் தனது உரையில், இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தைத் தோற்கடிக்க ஈரான் அதை எதிர்த்து வாக்களிக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். திரும்பத் திரும்ப எதிர்த்து வாக்களிப்பது குறித்து, பேசிய அவருக்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தமது நாட்டுக்கு வாக்களிக்கும் தகுதி இல்லை- அதில் அங்கம் வகிக்கவில்லை என்பதுகூட தெரியாதிருந்தது. இதுபோன்று விபரம் தெரியாத விளக்கம் இல்லாத மட்டங்களிலெல்லாம் அரசாங்கம் ஆதரவு திரட்ட முனைந்துகொண்டிருக்கிறது. இத்தகைய பிரசாரங்களின் பலனை அறிய அரசாங்கம் மார்ச் 28 ஆம் திகதிவரை காத்திருக்க வேண்டும்.

அதேவேளை அரசாங்கமோ, ஜெனிவா தீர்மானத்தை வைத்து அரசியல் வெற்றியை அறுவடை செய்வதில் தீவிரமாகியுள்ளது. ஜெனிவா அழுத்தங்களுக்குப் பதிலடி கொடுக்க மாகாணசபைத் தேர்தலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச. தமக்கு சார்பாக அரசாங்கத்தை அமைக்க, ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா முனைவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். அதுபோலவே, லிபியாவிலும் ஈராக்கிலும் ஆட்சிக் கவிழ்ப்பை செய்ததுபோல இலங்கையிலும் செய்ய அமெரிக்கா முனைவதாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸும் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆக, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகின் நகர்வுகளுக்கு எதிராக வெளிநாடுகளில் மட்டுமன்றி உள்நாட்டிலும் அரசாங்கம் தீவிர பிரசாரத்தையே மேற்கொண்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் மேடைகளில் அரசாங்கத்தினால் எதையும் பேச முடிகிறது. எனவே, சர்வதேச அளவில் அரசாங்கத்தின் பிரசாரம் ஜெனிவாவில் தோல்வியைத் தழுவ நேர்ந்தாலும் உள்நாட்டில் இத்தகைய பிரசாரம் தோல்வியைத் தழுவாது என்று அரசாங்கம் நம்புவதில் ஆச்சரியமில்லை.

-கபிலன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2014-14.03.2014



## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நல்ல உள்ளம் கொண்ட தனுசு இராசிநேயர்களே!**

**காரிய வெற்றி ஏற்படும் மாதம்!**

## மாதத்தின் மையப் பகுதியிலிருந்து முன்னேற்றத்தைக் காண்பீர்கள்

மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருந்தாலும், மாதக் கடைசியில் குரு வக்ர நிவர்த்தியாகின்றார். சுக்ர பலத்தோடும், அஷ்டமத்துச் சந்திரன் ஆதிக்கத்தோடும் இம்மாதம தொடங்குவதால் மாதத் தொடக்கத்தில் மன நிம்மதி ஓரளவு குறையலாம். இருப்பினும் மாதத்தின் மையப்பகுதியில் படிப்படியான முன்னேற்றங்களைக் காணப்போகிறீர்கள்.

சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் சந்தோஷக் குறைவு வரத்தான் செய்யும். என்றாலும் தன்னம்பிக்கையும், தக்க சமயத்தில் நண்பர்களின் ஒத்துழைப்பும் உங்களுக்கு கிடைத்துக்கொண்டேயிருக்கும். எனவே வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். 10 இல் செவ்வாய் பலம் பெற்றிருப்பதால் தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பங்குதாரர்கள் பக்கபலமாக இருப்பர்.

அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். இடமாற்றச் சிந்தனை மேலோங்கும். பணியாளர்களின் தொல்லை அகலும். அலுவலகப் பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு குறைவாக இருக்கிறதே என்ற கவலை இனி மாறும். பெரிய முதலீடுகள் செய்து தொழில் தொடங்கும் முயற்சிக்கு அரசுவழி ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

குரு வக்ர இயக்கத்தில் இருந்தாலும் கூட அதன் பார்வைக்கு பலன் கிடைக்குமல்லவா? எனவே, மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மாற்றங்கள் வருவதை ஏற்றுக் கொள்ளுங்கள். வீட்டு முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியிலும் அனுகூலம் கிடைக்கும்.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

உங்கள் ராசிக்கு 7, 10 அதிபதியான புதன் மாதத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் இருககிறார். பெப்ரவரி 21 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். சப்தமாதிபதி வக்ர நிவர்த்தி ஆகும் பொழுது கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தொழில ஸ்தானாதிபதியாகவும், புதன் விளங்குவதால் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலை நிரந்தரமின்றி இருப்பவர்களுக்கு நிரந்தர பணி அமையும். மார்ச் 10 ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்ற பழமொழிப்படி வரும் நல்ல வாய்ப்புகளை எல்லாம் உபயோகப் படுத்திக் கொள்ள முன்வருவீர்கள்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

6, 11-க்கு அதிபதியான சுக்ரன் பெப்ரவரி 25ஆம் திகதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். வியாபார விரோதங்கள் விலகும். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

**சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும்!**

மார்ச் முதலாம் திகதி சனி, செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்களும் வக்ரமடைகின்றன. எனவே, குடும்பத்தில் சிறு, சிறு குழப்பங்கள் உருவாகும். சகோதரர்கள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்வி முயற்சிக்கும், கடல் தாண்டும் முயற்சிக்கும், கல்யாண காரியங்களுக்கும் செலவிடும் சூழ்நிலை உண்டு. பஞ்சம ஸ்தானாதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எனவே அங்காரக ஸ்தல வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**

உங்கள் ராசிநாதனாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு இம்மாதக் கடைசியில் மார்ச் 12ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். இது மிகுந்த நன்மையைத் தரும். ராசிநாதன் பலம் பெற்று இருக்கும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழிலில் வருமானம் திருப்திகரமாக அமையும். பூமி யோகம் முதல் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு வரை வந்து கொண்டேயிருக்கும். இம்மாதம் வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் அஞ்சல் வழியில் அனுகூலம் தரும் செய்தி வந்து சேரும் மாதமாக அமையப் போகிறது. நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறப் போகிறது. தாய்வழி ஆதரவு கூடும். தனவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாமா என்று குடும்பத்தினர் முடிவெடுப்பர்.

எதிர்காலம் இனிமையாக அமைய புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். குரு வழிபாடு குதூகலம் தரும்.

## சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்**

**பிறர் போற்றும் அளவு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று நினைக்கும் மகர இராசிநேயர்களே!**

**நினைத்தது நிறைவேற நிதானம் தேவை!**

## மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வாய்ப்பு கிட்டும்

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவே இருக்கிறது. விரயாதிபதி வியாழன் வக்ரம் பெற்று விரய ஸ்தானத்தைப் பார்க்கும் பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகள் கூடுதலாக இருக்கும். பழைய கடனைக் கொடுத்து விட்டுப் புதிய கடன்களை வாங்குவீர்கள். பயணங்களும் அதிகரிக்கும்.

அஷ்டமாதிபதி சூரியன் 2 இல் சஞ்சரிப்பதால் பணம் வந்த மறுநிமிடமே செலவாகி விடும். ஓய்வெடுக்க முடியாத அளவு வேலைப்பளு அதிகரிக்கும். வாகனப் பழுதுகள் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டு செலவுகளைக் கூட்டலாம். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். வியாபார நலன் கருதி எடுத்த முடிவுகளை அடிக்கடி மாற்றியமைப்பீர்கள். நல்ல பணியாளர்களை விலகிச் சென்றுவிடாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

உத்தியோக ஸ்தானாதிபதி புதன் மாதத் தொடக்கத்தில் வக்ரமாக இருக்கிறார். எனவே உடன் பணிபுரிபவர்களையும் அனுசரித்துக் கொள்வதே நல்லது. பொதுவாக இம்மாதத்தில் உங்கள் ராசிநாதன் வக்ரம் பெறப்போகிறார். அவரே தனாதிபதியாகவும் விளங்குவதால் மிகுந்த கவனத்துடன் நடந்துகொள்வதே நல்லது. யாருக்கேனும் வாக்குக் கொடுத்தால் அதைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம் தான். இதுவரை தாராளமாகச் செலவிட்டு வந்த நீங்கள் இம்மாதம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சியும், வக்ர நிவர்த்தியும்!**

மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். அதுவும் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். 6, 9-க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். அதே நேரத்தில் பெப்ரவரி 21 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகி விடுகிறார். எனவே, தந்தை வழி உறவில் இருந்த விரிசல் மாறும். உறவினர்களின் பகை அகலும். மார்ச் 10ஆம் திகதி கும்ப ராசிக்கு புதன் செல்லவிருக்கிறார். எனவே, மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வாய்ப்புகள் கிட்டும். மாமன், மைத்துனர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பெற்றோர் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

**மகரச் சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 5, 10-க்கு அதிபதியான சுக்ரன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வீர்கள். வியாபார விரோதங்கள் விலகும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பெப்ரவரி 25ஆம் திகதி சுக்ரப் பெயர்ச்சியாவதால் அதன் பிறகு ஆதாயத்தை எதிர்பார்க்கலாம்.

**சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும்!**

ஒரே நாளில் சனி, செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்களும் வக்ர இயக்கத்தை தொடங்குகின்றன. ராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்குபவர் சனி, சுக ஸ்தானாதிபதியாக விளங்குபவர் செவ்வாய். இப்படி நல்ல இடத்து ஆதிபத்யங்களைப் பெற்ற கிரகம் வக்ர நிலையில் இருக்கும் பொழுது விழிப்புணர்ச்சியுடன் இல்லாவிட்டால் விரயங்களையே சந்திக்க நேரிடும். இந்த வக்ர இயக்கம் மார்ச் முதலாம் திகதி நிகழவிருக்கிறது. எனவே ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். அருகிலிருப்பவர்களை அரவணைத்துச் செல்லுங்கள். மோதலையும், முன்கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. தொழிலில் ஏமாற்றங்களை ஒரு சிலர் சந்திக்க நேரிடும்.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்திக் காலம்!**

3, 12-க்கு அதிபதியான குரு பகவான் மாதத்தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். சகாய ஸ்தானாதிபதி வக்ரம் பெறும் பொழுது, எதிர்பார்த்த காரியங்களில் தாமதம் ஏற்படும். ஆயினும் மார்ச் 12ஆம் திகதி குரு வக்ர நிவர்த்தியாகிறார். இதன விளைவாக வழக்குகளில் வெற்றி கிட்டும். வாய்ப்புகள் வாயிற்கதவைத்தட்டும்.

இம்மாதம் விநாயகப்பெருமான் வழிபாடும், சனி பகவான் வழிபாடும் சனிக்கிழமை தோறும் அதிகாலை நேரத்தில் செய்து வந்தால் அண்டி வரும் தடைகள் அகலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய மாதமாகும். குடும்பச் சுமை கூடும். கூடியிருப்பவர்களைப் பகைத்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையைச் செலவு செய்ய நேரிடும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாதிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. எந்தக் காரியம் செய்தாலும் குடும்பத்திலுள்ள பெரியவர்களை கலந்து ஆலோசித்துச்செய்வது நல்லது. சனி, செவ்வாய் இரண்டும் வக்ரம் பெறும் இந்த மாதத்தில் பணிபுரியும் இடத்திலும், பழகும் இடத்திலும் பிரச்சினைகள் ஏற்படாமலிருக்க மணிகட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டு வருவதுநல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த காணொலியை விரைவில் காண்பிப்பேன்

## கெலம் மக்ரே தெரிவிப்பு

**இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டி லுள்ள ஆபிரிக்கா மற்றும் இலத்தின் அமெரிக்க நாடுகளுக்காக அடுத்த காணொலியை காண்பிக்க உள்ளதாக சனல் 4 தொலைக்காட்சியின் தயாரிப் பாளர் கெலம் மக்ரே தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸ்நாடாளுமன்றகட்டடத்தின விக்டர் ஹியூகோ மண்டபத்தில் அண்மையில் திரையிடப்பட்ட போர் தவிர்ப்பு வலயம் காணொலி காட்சிப்படுத்தலின் போதே கெலும் மக்ரே மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் இலங்கையின் மனிதாபிமானத் திற்கு எதிரான குற்றம் சம்பந்தமாக விசாரணை நடத்த இலங்கைக்கு மேலும் காலஅவகாசம் வழங்கப்படும் என நினைக்கின்றேன்.

இறுதிக்கட்ட போரில் மேற்குலக நாடுகள், அமெரிக்கா, சீனா, ஈரான், இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் என அனைத்து நாடுகளும் ராஜ பக்ஷ வுக்கு உதவின. போர் முடிந்த பின் னர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ ஆற்றிய திறமையான உரை குறித்து கவனம் செலுத்துங்கள்.

இலங்கை பயங்கரவாதத்தை எதிர்கொண்டு இதனை முடிவுக்கு கொண்டு வந்ததாகவும் நாடுகளின் உள்விவகாரங்களில் பலமிக்க நாடுகள் தலையிடக் கூடாது எனவும் அவர் அமெரிக்காவை மறைமுகமாக சுட்டிக்காட்டி கூறியிருந்தார்.

இது வேடிக்கையான மற்றும் பொய்யான ஏகாதிபத்திய எதிர்ப்பு. இந்த கதையினை ஆபிரிக்க மற்றும் இலத்தன் அமெரிக்க நாடுகள் நம்பின.

எமது அடுத்த காணொலியை ஆபிரிக்க மற்றும் இலத்தன் அமெரிக்க நாடுகளுக்கு காண்பிக்க உள்ளோம். இந்த நாடுகளுக்கு அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுடன் முரண் பாடுகள் உள்ளன. இதுதான் ராஜபக்ஷவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு காரணமாக அமைந்தது. எனினும் எமது காணொ லியின் ஊடாக ராஜபக்ஷவின் பொய்யான ஏகாதிபத்திய எதிர்ப்பை இந்த நாடுகள் புரிந்து கொள்ளும்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைக்கான சந்தர்ப்பத்தை ஐக்கிய நாடுகள் வழ ங்கும் என நாங்கள் எதிர்பார்க் கின்றோம். அதேபோல் பிரித்தானிய பிரதமர் கமரூன் தான் கூறியது போல் வலுவாக செயற்படுவார் என நம்பு கிறோம். எப்படி இதற்கு உதவலாம் என நாம் எண்ணி வருகிறோம்.

காணாமல் போதல் சம்பவங்கள ஊடாக அவர்கள் இலங்கையின் நிலைமைகளை புரிந்து கொள்ள முடியும். அதன் பின்னர் அது பற்றிய கலந்துரையாடல்கள் நடக்கும். என் னிடம் உள்ள தகவல்களை வைத்து போரில் என்ன நடந்தது என்பது பற் றிய கதையை எழுத முடியும். தமி ழர்களின் இனப்படுகொலை தொடர் பில் குறிப்பாக சட்ட துறையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் நட வடிக்கைகள் குறிப்பாக, தமிழ் பெண்களுக்கு ஏற்படும் தொந்தரவுகள், படையினர் வடக்கில் சகல இடங்க ளையும் கைப்பற்றியுளளமை, சிங்கள குடியேற்றத்தின் மூலம் மேற் கொள்ளப்படும் துரிதமான சிங்கள மயமாக்கல், பலவந்தமான நில அபகரிப்பு, திட்டமிட்டு செயற்படுத் தப்படும் பாலியல் துஷ்பிரயோகங்கள என அனைத்திலும் அரசாங்கத்தின தலையீடு இருக்கின்றது என நான் நம்புகிறேன் என அவர் தெரிவித் துள்ளார். (அ-2)

# தேசிய பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வு

## மாவை எம்.பி.வலியுறுத்து

தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறைமையிலான தீர்வுத் திட்ட மொன்று முன்வைக்கப்பட வேண்டு மெனதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினை குறித்த கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணிப் பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் சுயாட்சி அதிகாரங்கள் உள் ளிட்ட வகையிலான தீர்வுத் திட்ட மொன்றையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற வட மாகாண சபையின் முதலமைச்சர் விக்னேஸ வரன் 100 வீத அதிகாரப் பகிர்வினை தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை என குறிப்பிட்டிருந்தமை தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு பதில ளித்த போது மாவை சேனாதிராஜா, சமஷ்டி முறைமை குறித்து வலியுறுத் தியுள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விக்னேஸ்வரனின் கருத்து பற்றி தமக்கு தெரியாது எனவும், அவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தால் அது தனிப்பட்ட கருத்தாகவே இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள் ளார். (அ-2)

# மீனவர் பிரச்சினை குறித்து விசேட கூட்டம் நடத்தப்படும்

## அமைச்சர் ஜீ.கே.வாசன்

மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் விசேட கூட்டமொன்று நடத்தப்பட உள் ளதாக இந்திய மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் மீது இலங் கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாகவும், கைது செய்வ தாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் ஊடகவியலா ளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதி லளித்த போதே அவர் மேற் கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழக மீனவர்களின் நலன் களை உறுதி செய்ய இந்திய மத்திய அரசாங்கம் சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு காணும் நோக்கில் விசேட கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள் ளார்.

கச்சதீவை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அதற்காக காங் கிரஸ் கட்சி போராடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



கோபிராஜ் எழுதிய இந்து சமய பண்பாட்டில் பலி எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் .மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் மா.வேதநாதன் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# விசா காலம் முடிவடைந்த பின்னரும் தங்கியிருப்போர் நாடு கடத்தப்படுவர்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

விசா காலம் முடிவடைந்து நாட்டில் தங்கியிருப்பவர்களை கைது செய்ய விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள் ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோதத பாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடா்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் விசா காலம் பூர்த்தியா னதன் பின்னர் தங்கியிருப்பவர் களுக்கு எதிராக எவ்வாறான நட வடிக்கை எடுக்கப்படுகின்றதோ அதேவிதமான நடவடிக்கை இலங் கையிலும் எடுக்கப்படும்.

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருப்போரை கண்டு பிடித்து அவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பய ணி கள் தங்கியிருக்கும் ஹோட்டல்கள விடுதிளுக்கு விசேட அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஹோட்டல்களில் தங்கும் வெளி நாட்டுப் பிரஜைகளின் கடவுச்சீட்டு பிரதி ஒன்றை அருகாமையில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள் ளது.

சில இந்தியர்கள் சுற்றுலா விசாககளை துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். சுற்றுலா விசாக்க ளின் மூலம் நாட்டுக்குள் பிரவே சிக்கும் குறித்த இந் தியர்கள் வர்த்தக மற்றும் ஏனைய தொழில் களில் ஈடுபட்டு வருகின்றனர்.

விசா காலம் காலாவதியாகியும் தங்கியிருந்த பலர் நாடு கடத்தப்பட் டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கனடா அல்லது அமெரிக்காவிற்கு வசா பெற்றுக் கொள்வது மிகவும் கடினமானது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். எனினும், வெளிநாட்டுப் பிர ஜைகள்மிக இலகுவாக இலங்கைக்குள் பிரவேசித்து சுதந்திரமாக நடமாடு கின்றனர். இந்த சுதந்திரத்தை புலம் பெயர் தமிழர்கள் பிழையாக பயன் படுத்திக்கொள்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது.

பயங்கரவாதத்தில் ஈடுபட்டு குண்டுகளை தயாரித்தவர்கள் இன்று மனித உரிமைகள் பற்றி பேசி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை என்றால் என்ன வென்றே தெரியாதவர்கள் நாட்டுக்கு எதிராக போலி மனித உரிமை மீறல [illegible] ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படாது

## வேட்பாளர் நரேந்திர மோடி உறுதியளிப்பு

இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகள் வழங்கப்பட மாட்டாது என பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரி வித்துள்ளார்.

தமது கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் இலங்கைக்கு எந்தவிதமான இராணுவ உதவி களும்வழங்கப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகள்வழங்கப்படாது என நரேந்திர மோடி தமக்கு வாக்குறுதி அளித்துள ளதாக மறுமலர்ச்சி திராவிட முன்னே ற்றக் கழகத்தின் பொதுச் செயலாளா வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தக் குற்றச் செய ல்கள் இடம்பெற்றதாக மக்கள் தீர்ப் பாயத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# போகம்பரை சிறை மக்கள் பார்வைக்கு

போகம்பரை சிறைச்சாலையை பொதுமக்கள் பார்வையிடுவதற் கான திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. போகம்பரை சிறைச்சாலையை துப்புரவாக் கும் பணிகள் இன்னமும் நிறைவடையாத நிலையில் மேற்படி சிறைச்சாலையை பொது மக்கள் பார்வையிடுவதற்கான காலம் இன்னும் சில தினங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையை துப்புரவாக்கும் பணிகள் நிறைவடைந்ததும் புனர்வாழ் வுகள் மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சரினால் நிர்ணயி க்கப்படும் தினத்தில் மேற்படி சிறைச்சாலையினை பொதுமக்கள் பார்வை யிட முடியும் என்றும் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை-தென்னாபிரிக்கா தூதுவராக சிறில் ரமபோசா

இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை தென்னாபிரிக்க அரசாங்கம் நியமித்துள்ளது.

அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவுமாறு இலங்கையும் தென்சூடானும் விடுத்த வேண்டுகோள்களையடுத்து, இந்த இரு நாடுகளுக்குமான சிறப்புத் தூதுவராக சிறில் ரமபோசா நியமிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தென்னாபிரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றிய, அந்நாட்டு ஜனாதிபதி ஜேக்கப் சூமா இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக இரண்டு நாடுகளும் ஏற்கனவே கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன.


இந் நிலையிலேயே கடந்த வாரம் தென்னாபிரிக்க ஜனாதிபதி இலங்கை, தென் சூடான் ஆகிய நாடுகளுக்கான சிறப்புத் தூதுவரை நியமித்துள்ளார்.

மோதல்களுக்குத் தீர்வுகாணுதல் மற்றும் இணக்கப் பேச்சுகளில், குறிப்பாக, தென்னாபிரிக்காவின் அனுபவங்களின் அடிப்படையில் இந்த இரண்டு நாடுகளும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள இவர் தனது நிபுணத்துவ உதவிகளை வழங்குவார் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவர் தென்னாபிரிக்காவில் நிறவெறியை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான பேச்சுக்களிலும் 1994 இல் முதலாவது தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்துவதிலும் பெரும் பங்கு வகித்தவர்.

தற்போது இவர் தென்னாபிரிக்காவை ஆளும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பிரதித் தலைவராகவும் பதவி வகிக்கிறார். (அ-2)

## பிரிவுத்துயர் பகிர்வு



### கோபாலப்பிள்ளை தம்பிப்பிள்ளை

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலப்பிள்ளைதம்பிப்பிள்ளை கடந்த14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றது.



### காத்தாமுத்து ரஞ்சனதாஸ்

வல்வெட்டித்துறை வேம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தெணியம்பையை வசிப்பிடமாகவும் கொண்ட காத்தாமுத்து ரஞ்சனதாஸ் கடந்த14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### கதிரேசு சண்முகநாதன்

பொலிகண்டி மனையாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு சண்முகநாதன் கடந்த 15ஆம்திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவர்து இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# சர்வதேச விசாரணையொன்றை நடத்துமாறு கோரினேன்

## ஜெனீவா சென்று திரும்பிய அனந்தி தெரிவிப்பு

இலங்கையில் காணாமற் போயுள்ளவர்கள் தொடர்பில் சுதந்திரமாக சாட்சியமளிக்கத்தக்க வகையிலான சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று வடமாகாண சபையின் பிரதிநிதியாக ஜெனீவாவுக்குச் சென்று திரும்பியுள்ள அந்த சபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் தமிழோசையிடம் கூறியுள்ளார்.

சர்வதேச மனிதவுரிமை அமைபபுக்கள் பலவற்றையும் ஜெனீவாவிலுள்ள சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து போரினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள், சிறுவர்களின் நிலைமைகள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாக கண்துடைப்பு நடவடிக்கை என்று சொல்லத்தக்க வகையிலான உள்ளூர் விசாரணைகள் என்பன தொடர்பாக விபரமாக எடுத்துக்கூறியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

வடமாகாண சபையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முடிவுக்கு அமைய அதன் பிரதிநிதியாக வடமாகாண முதலமைச்சர் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் ஜெனீவாவுக்கான இந்த விஜயத்தை மேற்கொண்டதாகவும் அவர் தமிழோசையிடம் குறிப்பிட்டார்.

இறுதிப்போரின் ஒரு கண் கண்ட சாட்சியாக மட்டுமல்லாமல், இராணுவத்தினரிடம் சரணடைவதற்காகத் தனது கணவனை நேரடியாகக் கையளித்தவர்களில் ஒருவர் என்ற வகையில் அவ்வாறு தமது உறவுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தவர்களின் பிரதிநிதியாக ஜெனீவா சென்றிருந்ததாக அவர் கூறினார்.

"காணாமற் போயுள்ளவர்கள் தொடர்பில் எல்.எல். ஆர்.சி. போன்று காலம் கடத்துவதற்காகவே ஜனாதிபதி ஆணைக்குழுவும் விசாரணைகளை இப்போது நடத்தி வருகின்றது.

இந்த விசாரணைகளில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில் எமது உறவுகளை இராணுவத்தினரிடம் கையளித்த பின்னர் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பது தெரியாத நிலையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ள எங்களுடைய வழக்கில் அரச தரப்பு சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் வாதாடுகின்ற வழக்கறிஞர் ஒருவரே காணாமற் போயுள்ளவர்கள் பற்றி விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இலட்சக கணக்கான மக்கள் பார்த்திருக்க இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் காணாமற் போயிருக்கின்றார்கள். அதனை மறுத்து வாதாடுகின்ற வழக்கறிஞர் சம்பந்தப்பட்ட வசாரணையில் நாங்கள் நம்பிக்கை கொள்ளமுடியாது.

இதற்காகவே நாங்கள் சுதந்திரமாக அச்சமின்றி சாட்சியமளிக்கத்தக்க ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம் என்று ஜெனீவாவில் சந்தித்தவர்களிடம் நான் எடுத்துக் கூறியிருக்கின்றேன்"

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள், சிறுவர்கள் அனுபவிக்கின்ற கஷ்ட நிலைமைகள் பற்றிய உண்மையான நிலைமைகளை ஜெனீவாவில் உள்ளவர்கள் அறிந்திருக்கவில்லை என்றும் தான் அந்த விடயங்களை எடுத்துக் கூறிய போது அவை அவர்களுக்குப் புதிதாக இருந்தன என்றும் அனந்தி சசிதரன் குறிப்பிட்டார். (அ-2)

## தேசிய இளைஞர் கொள்கை ஜனாதிபதியினால் வெளியீடு!

இலங்கையின் முதலாவது தேசிய இளைஞர் கொள்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற வைபவத்தில் வெளியிடப்பட்டது.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் இந்த தேசிய இளைஞர் கொள்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட பின்னரே அது வெளியிடப்பட்டது.

இலங்கையின் சகல பகுதிகளில் இருந்தும் சுமார் ஐயாயிரம் இளைஞர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

சிரேஷ்ட அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, அதாவுத செனவிரட்ன, அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பாராளுன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இதில் பங்கேற்றிருந்தனர். (அ-2)

# சேவாலங்கா நிறுவனம் விவசாய நிலங்களை துப்புரவாக்கிவருகிறது

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் 807 ஏக்கர் விவசாய நிலங்கள் துப்புரவாக்கி முடிக்கப்பட்டதுடன், எஞ்சிய விவசாய நிலங்கள் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் துப்புரவாக்கப்படுமென சேவாலங்கா நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் எஸ்.சஞ்சீவகுமார் தெரிவித்தார்.

சிறாட்டிக்குளம், மூப்பன் பகுதியில் கைவிடப்பட்ட 100 ஏக்கர் வயல் நிலங்களை துப்புரவு செய்வதாக பொறுப்பேற்ற சேவாலங்கா நிறுவனம் அதில் 20 ஏக்கர் நிலங்களை துப்புரவு செய்யவில்லையென அப்பகுதி விவசாயிகள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் எஸ்.சஞ்சீவகுமாரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களிலுள்ள பற்றைகளை வெட்டியும் பாரியளவான குப்பைகளை அகற்றியும் கொடுப்பதாகக் கூறி 2012 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில், 807 ஏக்கர் விவசாய நிலங்கள் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் துப்புரவாக்கி முடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எஞ்சிய விவசாய நிலங்கள் துப்புரவாக்கப்படவுள்ளன.

இதன் போது, மேற்படி சிறாட்டிக்குளம், மூப்பன் பகுதியிலுள்ள 20 ஏக்கர் விவசாய நிலங்களும் துப்புரவு செய்யப்படுமெனவும் அவர் கூறினார். (அ-250)

# இலங்கையின் அபிவிருத்திக்கு முஸ்லிம் நாடுகள் உதவ வேண்டும்

## பிரதமர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்திக்காக ஈரான் உட்பட முஸ்லிம் நாடுகளின் ஒத்துழைப்புகளை இலங்கை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஈரானிய ஆன்மீக தலைவரும் அந்நாட்டின் ஹஜ் யாத்திரை குழுவின் தலைவருமான அயத்துல்லா ஸ்லாமி வாஷி அஸ்கார் தலைமையிலான ஈரானிய தூதுக் குழுவினர் பிரதமரை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெற உள்ள மனிதவுரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் முன்வைக்கப்படவிருக்கும் பிரேரணை தொடர்பில்கடந்த முறையை போன்றே இம்முறையும் பல உலக நாடுகள் இலங்கையை ஆதரிக்கும்.

இலங்கையின் மனிதாபிமானத்திற்கான போராட்டத்தின் நியாயத்தை உலகத்திற்கு எடுத்துரைக்க இது சிறந்த சந்தர்ப்பமாகும்.

இலங்கையின் அபிவிருத்திக்காக ஈரான் உட்பட பல அரேபிய நாடுகள் பல தசாப்த காலமாக இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

எனினும் கொடூரமான பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததில் இருந்து பல மேற்குலக நாடுகள் இலங்கையில் மனிதவுரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தொடர்ந்தும் குற்றஞ்சாட்டிவருவதுடன், விசாரணை ஒன்றின் ஊடாக இலங்கையின் நிர்வாகத்தை வீழ்த்த முயற்சித்து வருகின்றனர் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (அ-2)

# இராணுவ அதிகாரிகளுடைய செல்பேசி இலக்கங்களில் மாற்றம்

இராணுவ அதிகாரிகளின் செல்லிடப்பேசி இலக்கங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தில் கடமையாற்றி வரும் சகல அதிகாரிகளினதும் செல்லிடப்பேசி இலக்கங்கள் கடந்த 15 ஆம் திகது முதல் மாற்றம் செய யப்பட்டுள்ளன.

புதிய செல்லிடப்பேசி இலக்கங்கள் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர்ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றினால் இவ்வாறு செல்லிடப் பேசி சிம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

என்ன காரணத்திற்காக இவ்வாறு புதிய இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன உறவுகளை மீட்டுத்தாருங்கள்; உறவினர்கள் கண்ணீர் மல்க நேற்றும் கோரிக்கை

யாழ்.மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக இடம் பெற்றஜனாதிபதியின் ஆணைக்குழுவின் விசாரணையில் சாட்சியமளித்து தமது உறவினர்களை எப்படியாவது உயிருடன் மீட்டுவிடவேண்டுமென்ற அவாவுடன் உறவுகள் அதிகளவில் ஆர்வம் காட்டியிருந்தனர்.

கடத்தப்பட்டு காணாமற்போன தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் மீட்டுத்தருமாறு கண்ணீருடன் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் உறவினர்கள்நேற்றும்மன்றாடினார்கள்.

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் யாழ்.மாவட்டத்தில் நேற்றுடன் நான்காவது நாளாக தொடர்ந்து இடம்பெற்றது.

இந்நிலையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்ற ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் விசாரணையில் சாட்சியமளித்து தமது உறவினர்களை எப்படியாவது உயிருடன் மீட்டுவிட வேண்டுமென்ற அவாவுடன் உறவுகள் அதிகளவில் ஆர்வம் காட்டியிருந்தனர்.

**பிச்சை சம்பளம்.**

இலங்கை அரசாங்கம் கொடுக்கும் பிச்சைச் சம்பளம் 500 ரூபா எடுத்து தான் நானும் எனது மனநலம் குன்றிய மகளும் வாழ்ந்து வருகின்றோம் என்றும் கடந்த 1990 ஆம் ஆண்டு காணாமற்போன மகனை மீட்டுத்தருமாறும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின் போது வயோதிபத் தாயொருவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விசாரணைக்கு சாட்சியமளிக்க வந்த குறித்த வயோதிபத் தாய் மேலும் தெரிவிக்கையில்,

எனது மகன் கடந்த 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமற் போனார். அவரை கொண்டு சென்றது இராணுவம்தான். அன்றிலிருந்து இன்று வரை அவனை நான் தேடி அலைகின்றேன். ஆனால் அவனைக் காணவில்லை. உழைத்து குடும்பத்தை பார்க்கவேண்டிய பிள்ளையை பிடித்துக் கொண்டு போய வைச்சிருக்கிறாங்கள்.

நானும் எனது மனநலம் குன்றிய மகளும் வெறும் 500 ரூபா பிச்சைச் சம்பளம்எடுத்து தான்வாழ்கின்றோம். எனக்கு 300 ரூபா தருகின்றனர். மகளுக்கு 200 ரூபா தருகினம். அந்தப்பணம்எமக்கு போதாது. நீங்கள் எமக்கு பண உதவிசெய்யாமல் விட்டாலும் பரவாயில்லை ; காணாமற் போன எனது மகனை மீட்டுத்தாருங்கள் என்று அந்த வயோதிபத்தாய் ஆணைக்குழுவிடம் மன்றாடினார்.

**தலைவர் இன்றி விசாரணை.**

காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் தலைவர் மக்வெல் பராக்கிரம பரணஹமவின் பங்கேற்பின்றி யாழ்ப்பாணத்தில் அந்த ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்று இடம் பெற்றன.

இந்த விசாரணைகளின் சாட்சியமளிப்புகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது முற்பகல் 10.55 மணியளவில் 17 ஆவது நபரின் சாட்சியமளிப்பு முடிவடைந்தபோது ஆணைக் குழுவின் தலைவர் உடல்நலம் குறைவாகவுள்ளதாக கூறிவிட்டு விசாரணைகளிலிருந்து வெளியேறினார்.

இதனையடுத்து ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் ஆணையாளர்களான மனோ ராமநாதன் மற்றும் சுரண்யனா வித்தியாரட்ண முன்னிலையில் இடம்பெற்றது.

**இராணுவத்துக்கு குறைவில்லை.**

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் காணாமற்போனவர்களின் சாட்சியப் பதிவுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் யாழ்.மாவட்டத்திலும் இடம்பெற்று முடிவுற்றுள்ள நிலையில், இந்த ஆணைக் குழுவினரிடம் அதிகளவான சாட்சியப் பதிவுகள் இராணுவத்தினருக்கு எதிராகவே முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்றைய தினமும் இராணுவத்தினருக்கு எதிராக காணாமற்போனவர்களின் உறவினர்களின் சாட்சியப்பதிவுகள் அதிகமாகவே இடம்பெற்றன.

இராணுச் சோதனைசாவடிகளில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட இளைஞர்கள் கடத்தப்பட்டதாக இதன் போது சாட்சியமளிக்கப்பட்டது. அத்தோடு இராணுவத்தினரால் தான் தமது பிள்ளைகள் கொண்டுசெல்லப்பட்டதற்கு கண்ணால் கண்டசாட்சிகள் உள்ளன எனவும் சாட்சியமளித்தனர்.

வீட்டில் படித்துக்கொண்டிருந்த பிள்ளைகளையும் வந்து பிடித்துக் கொண்டு சென்றதாகவும் சிவில் உடையிலும் இராணுவ உடைகளிலும் வந்தவர்கள் தான் தமது பிள்ளைகளைப் பிடித்துச் சென்றதாகவும் தெளிவாக சாட்சியமளித்தனர்.

அதேவேளை இராணுவத்தினர் அந்தக்காலப்பகுதியில் இங்கிருந்தவர்களை கண்டபாட்டிற்கு பிடித்துச் சென்றனர். அதில் பலர் எங்கு கொண்டு செல்லப்பட்டனர்; அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை என்றும் கூறினர்.

**தொடர்பிருந்ததா?**

கடத்தப்பட்டு காணாமற்போனதாக கூறப்படும் நபர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன தொடர்பிருந்ததா? என்று ஆணைக்குழுவினர் சாட்சியம் வழங்க வந்திருந்த அனைவரிடமும் கேள்வியெழுப்பியிருந்தனர். இந்தக்கேள்வி ஜனாதிபதி ஆணைக் குழுவினரின் முக்கிய கேள்வியாக இடம்பெற்றிருந்தது.

இருப்பினும் இந்தக்கேள்விக்கு கணிசமானவர்களின் பதில் இல்லையென்றே வழங்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு அந்த அமைப்பிலிருந்து விலகி குடும்பத்துடன் வாழ்ந்து வந்ததாகவும் இராணுவத்திடம் இறுதியுத்தத்தின் போது சரணடைந்தபின்பே அவர்கள் காணாமற் போனதாகவும் சாட்சியப்பதிவுகள் இடம பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**எஸ்.ஆர்.கரன்**


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றியென்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.

*ஸ்ரீ அன்னை*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தனியார் போக்குவரத்து சங்கங்கள் கண்காணிப்புச் செலுத்த வேண்டும்

தனியார் போக்குவரத்துச் சேவைக்கான அனுமதியை வழங்க முன்பு, இலங்கைப் போக்குவரத்துச் சபையே பயணிகள் சேவையில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது.

அந்தக் காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி, நடத்துநர்களுக்கு நம் நாட்டில் மிகுந்த கௌரவம். அவர்கள் நினைத்தால் மட்டுமே பொதுமக்கள் பயணிக்க முடியும் என்ற நிலைமை இருந்தது.

ஆனால், தாராளப் பொருளாதாரக் கொள்கையின் அறிமுகத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபையின் ஏகபோக உரிமை பறிபோனது.

இப்போது தனியார் போக்குவரத்துச் சேவை தாராளமாக மலிந்துவிட்டது. இதனால் தனியார் போக்குவரத்து பஸ்கள், மற்றும் சிற்றூர்திகளை தவறவிட்டவர்களை ஏற்றிச் செல்கின்ற சேவையாகவே இலங்கை போக்குவரத்துச் சபையின் பணி அமைந்துள்ளது எனலாம்.

சுருங்கக் கூறின், பிரித்தானியாவின் எலிசபத் மகாராணிக்குப் பின்னால் ஓரடி தூரத்தில் வரக்கூடிய எலிசபத் மகாராணியாரின் கணவர் எடின்பரோவின் நிலைமையாகவே இலங்கை போக்குவரத்து பஸ்களின் நிலைமையுள்ளது.

அதாவது முன்னே தனியார் பஸ்கள் செல்ல பின்னே இ.போ.ச. பஸ்கள் இழுபடும். இந்த வழமைக்கு மாறாக தாங்கள் கடமையாற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு விசுவாசமாக நடக்க வேண்டும் என்று நினைக்கின்ற சாரதிகளும் நடத்துநர்களும் போட்டியாக சேவையில் ஈடுபட்டால்,

சில சண்டித்தனக்காரர்கள் அவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிட, அந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள் இவர்களுக்கு ஏன் தேவையில்லாத வேலை என்று கூறி தங்கள் பணியாளர்களுக்கு வஞ்சகம் செய்துவிட, விசுவாசத்திற்கு கிடைத்தது தர்மஅடி என்றாகி விடுகிறது.

இவற்றின் முடிபாக தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சிலர் கர்வத்தையும் சண்டித்தனக் கலாசாரத்தையும் கொண்டுள்ளனர்.

பயணிகளை மதிக்கவோ அவர்களின் உடைமைகளை பாதுகாக்கவோ இத்தகையவர்கள் முன்வருதில்லை. சில வேளைகளில் பயணிகளின் பெறுமதியான உடைமைகளை அபகரிக்கும் நோக்கில் செயற்படுவதையும் பயணிகள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து கூறியுள்ளனர்.

யாரிடம் முறையிடுவது என்பது தெரியாத நிலைமை. சண்டித்தனக் கலாசாரத்தின் தாண்டவத்திற்கு ஈடுகொடுக்க முடியாதென்ற பயம் என்பன காரணமாக எத்தனையோ பயணிகள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் மௌனமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனவே, இத்தகைய மோசடிகள் தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பில் தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் அதுசார்ந்த இணையங்கள் தங்கள் உறுப்புரிமை உள்ளவர்களின் நடவடிக்கையை கண்காணிப்பது அவசியமும் அவசரமுமாகும். நடக்குமா?

# காமா கதிர்வீச்சு நிலையம் திறப்பு

இலங்கையில் முதன்முறையாக நிர்மாணிக்கப்படும் காமா கதிர்வீச்சு நிலையத்தைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்துள்ளார்.

இலங்கையில் தொழில்நுட்பத் துறையில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்கும் இந்த காமா கதிர் வீச்சு நிலையம், பியகம முதலீட்டு வலயத்தில் அமைக்கப்பட்டு அதன் வாணிபமயப் பணிகளை ஆரம்பிக்க சகல நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மரக்கறி, பழவகை, மருத்துவ உபகர ணங்கள், இறப்பர் உற்பத்தி என்பவற்றின் ஊடாக கூடுதலான அனுகூலங்களைப் பெறு வதற்காக தொழில்நுட்ப ஆராய்ச்சி, அணு சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கெனவே காமா கதிர் வீச்சு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் இதன் மூலம் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படுமென அமைச்சு அறிவித்துள்ளது. உணவுப் பொருட்களை பழுதடையாமல் நண்டகாலம் பாதுகாத்து வைப் பதற்காக காமா கதிர்வீச்சு தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும்.

இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களை காமா கதிர்வீச்சு ஊடாக இலங்கையில் உருவாக்க முடிவதோடு அவற்றை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இத் திறப்பு விழாவில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உட்பட புத்திஜீவிகள் பங்கேற்றனர். (அ)

# இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படாது

## வேட்பாளர் நரேந்திர மோடி உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகள் வழங்கப்படமாட்டாது என பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் இலங்கைக்கு எந்த விதமான இராணுவ உதவிகளும் வழங்கப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகள் வழங்கப்படாது என நரேந்திர மோடி தமக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக மக்கள் தீர்ப்பாயத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை மத்திய அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுகின்றன

தமிழ் ஆசிரியர்கள் தமது தாய் மொழியில் கடமையாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் உத்தியோகபூர்வ கருமங்களை தமிழ் மொழியில் ஆற்றுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அநேகமான உத்தியோகபூர்வ ஆவணங்கள் சிங்கள மொழியில் மட்டுமே காணப்படுகின்றன. இதனால், தமிழ் மற்றும் முஸ்லிம் ஆசிரியர்கள் உத்தியோகபூர்வ கருமங்களை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விடுமுறை விண்ணப்பம் தொடர்பான ஆவணம் ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றன.

தமிழ் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவே இதனைக் கருத வேண்டுமென மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## அனர்த்தங்கள் குறித்து 117க்கு முறையிடலாம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் திடீர் அனர்த்தங்கள் தொடர்பில் உடனடியாக தகவல் அளிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதும் அவ்விலக்கம் செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விலக்கத்துடன் தொடர்புகளை மேற்கொள்கின்ற போதும் மறுமுனையிலிருந்து எவ்வித பதில்களும் கிடைக்கப்பெறுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஐ.இராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி. வலயத்தின் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன், சிறப்பு விருந்தினர்களாக பரந்தன் பிறிக்கெட் கொமாண்டர் என்.டி. அக்குறான் திலக, நாச்சிக்குடா ம.வி. அதிபர் அ.ஸ்ரீகாந்தன், இளைப்பாறிய அதிபர் சி.சந் திரராஜா, கௌரவ விருந்தினராககிராம சேவையாளர் திருமதி சு.சாரதாம்பாள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9,254)

✦ ✦ ✦ ✦ ✦ ✦

யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தின ராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதய குமார், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் சு.சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவன் இரா.செல்வவடிவேல், மக்கள் வங்கி உத்தியோகத்தர் மு.கலீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (அ-2)

## மானியங்கள் ஆணைக்குழுவில் பட்டதாரிகளை பதிதல்

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (Higher National Diploma in Accountancy) உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (Higher National Diploma in Commerce) கற்றை நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கீழ் பதிவு செய்து சான்றிதழ் வழங்குவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் இன்றுவரை மேற்குறிப்பிட்ட கற்கையினை பூர்த்தி செய்தவர்கள் இது தொடர்பாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவித்தல் மற்றும் விண்ணப்ப படிவத்தினையாழ்ப்பாணஉயர்தொழில்நுட்பவியல் நிறுவனவிளம்பரபலகையிலும்,யாழ்ப்பாண உயர்தொழில்நுட்பவியல்நிறுவனபழைய மாணவர் சங்க www.jatialumni.org என்ற இணைய தளத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்கசெயலாளர் வி.தயாபரன் அறியத்தந்துள்ளார். (எ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## உங்களில் சிறந்த ஆசான்



- கடவுளிடம் அனைத்து இயல்புகளும் இருக்கின்றன. ஆனால், மனித இயல்பு மூலமாகத்தான் நாம் அவரைக் காண இயலும்.
- தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு கடமையும் புனிதமானது தான். கடமையில் பக்தியுடன் இருப்பது தெய்வவழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்.
- ஒருவனுடைய பண்பை உருவாக்குவதில் இன்பம், துன்பம் இரண்டுமே சரிசமமான பங்கைப் பெறுகின்றன. அதிலும் இன்பத்தைவிட துன்பமே சிறந்த ஆசானாக அமைகிறது.
- வாழ்க்கையில் தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப்போல அதை விலக்கும் சக்தியும் நம்மிடம் உள்ளது.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்து; சென் நியூஸ்ரார் இளைஞர் கழக அணி சம்பியன்

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் அனுசரணையில் அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.



அணிக்கு 7 பேர் கொண்ட இப் போட்டிகள் அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் இறுதிப் போட்டியில் அராலி ஞானவைரவர் இளைஞர் கழக அணியும் துணவி சென் நியூஸ்ரார் இளைஞர் கழக அணியும் மோதின.

இரு அணிகளும் மாறி மாறி எதிரணிகளின் பகுதிகளை ஆக்கிரமித்த போதும் கோல் பெறமுடியவில்லை.

முதல் பாதி நிறைவடைய சில நிமிடங்கள் இருக்கையில் அராலி ஞானவைரவர் அணி கோலொன்றினைப் போட்டது.

பதிலுக்கு இரண்டாவது அரைப்



பாதியில் கோல் பெற துணவி சென் நியூஸ்ரார் அணி எடுத்த முயற்சிகள் வீண்போகாமல் விட அவ் அணியும் கோலொன்றினை போட்டது.

இதன்படி போட்டி ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் 1:1 என்னும் கோல் அடிப்படையில் சமநிலையிலிருந்தது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது அதில் 4:3 என்னும் கோல் அடிப்படையில் சென் நியூஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற காட்சிப் போட்டியில் பல்கலைக்கழக அணியும் நாவாந்துறை சென் மேரிஸ் அணியும் மோதின. இதில் 2:1 என்னும் கோல் கணக்கில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி வென்றது.

போட்டித்தொடரின் சிறந்த கழகமாக பாரதி இளைஞர் கழக அணியும், சிறந்த வீரனாக பாஸ்கரன் (சென் நியூஸ்ரார் இளைஞர் கழக அணி), சிறந்த கோல் காப்பாளராக கே.கலக்ஷன் (சென்னிஸ்ரார் இளைஞர் கழக அணி), அதிக கோல்களைப் போட்டவராக இ.லுகிரதன் (சென்னிஸ்ரார் இளைஞர் கழக அணி), தொடரின் சிறப்பாட்டக்காரனாக கஜரூபன் (சென் நியூஸ்ரார் இளைஞர் கழக அணி),





நன்நடத்தையுள்ள வீரனாக வீ.சிந்துஜன் (பாரதி இளைஞர் கழக அணி) வழங்கப்பட்டது.

தொடரில் 4ஆம் இடத்தை பாரதி இளைஞர் கழக அணியும், 3ஆம் இடத்தை சென்னிஸ்ரார இளைஞர் கழக அணியும், 2ஆம் இடத்தை அராலி ஞானவைரவர் இளைஞர் கழக அணியும், வெற்றிக்கிண்ணத்தை துணவி சென் நியூஸ் ரார் அணியும் வென்றன.

போட்டிகளில் வெற்றிக்கிண்ணங்களை வட மாகாண சபை உறுப்பினரும் வடமாகாண விளையாட்டு அமைச்சின் இணைப்பாளருமான இ.ஆர்னல்ட் வழங்கி வைத்தார். (க-23)







புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வித்தியாலய விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திலீபன் மங்கள விளக்கேற்றுவதையும் வெற்றிபெற்ற இல்லத்திற்கு தீவக கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் நா.லோகநாதன் கேடயம் வழங்குவதையும் பாடசாலை முதல்வர் ந.கலைநாதன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## தலைவர் வெற்றிக்கிண்ணம்; பிறைற்ஸ்ரார், அண்ணா வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

போட்டிகள் அனைத்தும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் பண்டத்தரிப்பு பிறைற்ஸ்ரார் அணியும் நவாலி சென் பீற்றர்ஸ் அணியும் மோதியது.

இதில் 3:0 என்னும் கோல் அடிப்படையில் பண்டத்தரிப்பு பிறைறஸ்ரார் அணி வென்றது.

மூளாய் வளர்மதி அணியும் அராலி அண்ணா வி.க மோதிய போட்டியில் அராலி அண்ணா வி.க 3:1 என்னும் கோல் அடிப்படையில் வென்றது.

இன்று இடம்பெறவுள்ள போட்டியில் ஈவினை கலைமகள் அணியும் விளான் அன்ரனீஸ் அணியும் மோதவுள்ளன. (க-23)

## மின்னொளியிலான தாச்சி; அறிவொளி வெற்றி

அளவெட்டி கிழக்கு கும்பழை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பழை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகி இடம் பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் சுதுமலை நாவலர் அணியும் மோதின. இதில் 6:5 பழங்கள் அடிப்படையில் பண்டத்தரிப்பு அறிவொளிஅணிவெற்றிபெற்றது.

இன்று இடம்பெறவுள்ள போட்டியில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து ஆலடி சிந்து வி.க அணி மோதவுள்ளது. (க-23)

## ஐ.பி.எல்.சூதாட்டத்தில் டோனி

### இந்தியன் சஞ்சிகை



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேந்திரசிங் டோனி சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளாதாக பொலிஸ் அதிகாரி ஒருவரின் அறிக்கையை மையமாக வைத்து தமிழக சஞ்சிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும் அவர் இந்த சூதாட்டத்தில் நேரடியாக ஈடுபட்டாரா என்பது குறிப்பிடப்படவில்லை. பொலிஸ் விசாரணைகளின் போது பந்தய தரகர் ஒருவர் இந்த தகவலை குறிப்பிட்டதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரியின் அறிக்கை தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் டோனி தொடர்பாக சந்தேகம் எழுப்பப்பட்ட அறிக்கை இவ்வாறே அமைந்துள்ளது.


"கடந்த 2013ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற இரவு விருந்தில் கிட்டி கலந்துகொண்டபோது அவரிடம் பேசிய விக்ரம் அகர்வால், "ஒரு பெரிய டீல் ஓகே ஆகிவிட்டது. நடைபெறப்போகும் ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு இடையிலான போட்டியில், சென்னை தோற்கும்" என்று சொல்லியுள்ளார்.

விருந்து முடிந்த பிறகு கிட்டி, குருநாத் மெய்யப்பன், விக்ரம் அகர்வால் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தபோது, ஜெய்ப்பூரில் உள்ள சஞ்சீவ் என்பருடன் குருநாத் மெய்யப்பன் தொலைபேசியில் பேசியுள்ளார். "திட்டத்தின்படி 140 ரன்கள் மட்டும் எடுத்துவிட்டு, போட்டியிலும் தோற்றுவிடுவதாக டோனி சொல்லிவிட்டார். எனவே எந்தப் பிரச்சினையும் இல்லை" என்று சொல்லியுள்ளார்" இந்த தகவலை பொலிஸில் சரணடைந்த பந்தய தரகர் ஹரிஷ் பஜாஜ் கூறியிருந்தார்.

இதை அடிப்படையாக வைத்து முழுமையாக டோனி சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற முடிவுக்கு வருவது கஷ்டம். வெறும் வாய் வார்த்தைகளாலும் ஒருவர் சொன்னார் என்ற அடிப்படையிலும் முடிவுக்கு வர இயலாது. ஆனாலும் இந்த வழக்கு சரியாக விசாரிக்கப்படவில்லை; மறைக்கப்படுகின்றது என இந்த அறிக்கையை வெளியிட்ட பொலிஸ் அதிகாரி சம்பத் குமார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அகப்பட்டுக்கொண்டவர்கள் ஒவ்வொருவரையும் மாற்றி மாற்றி மாட்டிவிடும் செயற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த பிரச்சினையும் அவ்வாறு அமைய வாய்ப்புக்கள் உள்ளன. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தகர்ந்தது இந்தியாவின் வெற்றிக்கனவு

வெலிங்டன் டெஸ்டில் நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மக்கலம் இரட்டைச் சதம் அடித்து கை கொடுக்க, நியூசிலாந்து அணி வலுவான முன்னிலையை பெற்றுள்ளது. இதன் காரணமாக இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு பறி போனது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்த நிலையில், 2வது டெஸ்ட். கடந்த 14ம் திகதி வெலிங்டனில் ஆரம்பமானது. முதல் இன்னிங்சில் நியூசிலாந்து 192 ஓட்டங்களும் இந்தியா 438 ஓட்டங்களும் எடுத்தன.

நேற்று முன்தினம் 3வது நாள் ஆட்டநேர முடிவில், நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கு 252 ஓட்டங்கள் எடுத்து, 6 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. மக்கலம் (114), வோட்லிங் (52) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## வோட்லிங் சதம்

நேற்றைய 4வது நாள் ஆட்டத்தை தொடர்ந்த மக்கலம், வோட்லிங் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சகீர், இஷாந்த் பந்துகளில் மக்கலம் பவுண்டரி அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக உயர்த்தினார். எதிர் முனையில் தன் பங்கிற்கு ஜடேஜா, சகீர்கான் பந்தில் பவுண்டரி அடித்த வோட்லிங், டெஸ்ட் அரங்கில் தனது 3வது சதத்தை பூர்த்தி செய்தார்.

## புதிய சாதனை

சகீர் வேகத்தில் இரண்டு பவுண்டரிகள் அடித்த மக்கலம், டெஸ்ட் அரங்கில் தனது 3வது இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். இதன் மூலம் அதிக இரட்டை சதம் அடித்த நியூசிலாந்து வீரர்கள் பட்டியலில் முன்னாள் தலைவர் ஸ்ரீபன் பிளமிங்குடன் (3 இரட்டைசதம்) முதலிடத்தை பகிர்ந்து கொண்டார். தவிர, அடுத்தடுத்த போட்டிகளில் இரட்டை சதம் அடித்த முதல் நியூசிலாந்து வீரர் என்ற புதிய சாதனையும் படைதததுடன் சர்வதேச அரங்கில் 6வது வீரர் ஆனார் மக்கலம்.

ஷமி வேகத்தில் வோட்லிங் (124) ஒருவழியாக ஆட்டமிழந்தார். 6வது வக்கெட்டுக்கு 352 ஓட்டங்கள் சேர்த்ததன் மூலம் மக்கலம் - வோட்லிங் ஜோடி புதிய உலக சாதனை படைத்தது.

இதற்குமுன் இந்தியாவுக்கு எதிராக கடந்த 2009ல் இலங்கையின் மஹேல ஜெயவர்த்தன - பிரசன்ன ஜெயவர்த்தன ஜோடி 6வது விக்கெட்டுக்கு 351 ஓட்டங்கள் சேர்த்ததே உலக சாதனையாக இருந்தது.




தொடர்ந்து துடுப்பெடுத்தாட வந்த நீஷம், அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்து டெஸ்ட் அரங்கில் தனது முதல் அரைச்சதத்தை பதிவு செய்தார்.

நேற்றைய நான்காவது நாள் ஆட்டநேர முடிவில், நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 571 ஓட்டங்கள் எடுத்து, 325 ஓட்டங்களால் வலுவான முன்னிலையைப் பெற்றது. மக்கலம் (281), நீஷம் (67) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்றைய 5வது நாள் ஆட்டத்தில் இந்திய அணிக்கு கடின இலக்கு உறுதி. இதனால் இப்போட்டியில் வெற்றி பெறும் இந்திய அணியின் கனவு தகர்ந்துள்ளதுடன். தொடரை சமன் செய்ய இருந்த கடைசி வாய்ப்பும்பறிபோயுள்ளது. இதன்காரணமாக போட்டி சமனிலையில் முடிய அதிக வாய்ப்பு காணப்படுகிறது. (க)

# பங்களாதேஷை வென்றது இலங்கை

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் திஸார பெரேராவின் துடுப்பாட்டம் கைகொடுக்க, இலங்கை அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இருஅணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது. மழை காரணமாக போட்டி 43 ஓவர்களைக் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி, பங்களாதேஷ் வீரர்களின் பந்துவீச்சுகளுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் விக்கெட்டுக்களை பறி கொடுத்தது.

ஒரு கட்டத்தில் இலங்கை அணி 21.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெறும் 67 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது.

எனினும் 9 விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த திஸார பெரேரா – சேனநாயக்கதமக்கிடையில் 82 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணியை சரிவிலிருந்து தூக்கி நிறுத்தினர்.




அணி 149 ஓட்டங்களை எடுத்திருந்தபோது சேனநாயக்க 30 ஓட்டங்களுடன் ஷகிப் அல் ஹசன் பந்தில் போல்டானார்.

தொடர்ந்து இறுதி வீரராக களமிறங்கிய மலிங்க, களத்தில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த பெரேராவுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

பெரேரா சிக்ஸர்கள் பவுண்டரிகள் என அட்டகாசமாக ஆடி ஓட்டங்களை எடுத்தார். இந்த ஜோடி தமக்கிடையில் 31 ஓட்டங்களை பகிர்ந்த போது மலிங்க ஓட்டமெதுவும் எடுக்காமல் செஹைறக் காஷியின் பந்தில் ஆட்டமிழக்க இலங்கை அணியின் இன்னிங்ஸ் 40வது ஓவரில் நிறைவுக்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக அதிரடியாக ஆடிய திஸார பெரேரா 57 பந்துகளில் 4 பவுண்டரிகள் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 80 ஓட்டங்களைக் குவித்தார்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் ருபைல்ஹுஸைன், ஷகிப் அல்ஹசன், அரபாத் சனி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு 43 ஓவர்களில் 181 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.



இவ்வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் மலிங்க, இவரின் பந்து வீச்சில் அனமுல் ஹக் ஓட்டமெதுவும் பெறாமல் மத்யூஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 2-வது விக்கெட்டுக்கு இணைந்த ரஹ்மான் – மொமினுல் ஹக் இணை சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.

இருவரும் தமக்கிடையில் 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த வேளை மொமினுல் ஹக் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் சம்சுர் ரஹ்மான் தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தார். ஆனாலும் அவர் அணி 114 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது 62 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அவரின் ஆட்டமிழப்பின் பின்தான் பங்களாதேஷ் அணியின் சரிவு ஆரம்பமாகியது.

தொடர்ந்து வந்த வீரர்கள் நிலைத்து நின்று ஆட இலங்கை பந்துவீச்சாளர்கள் விடவில்லை.

இதன்காரணமாக பங்களாதேஷின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளிகளில் வீழ்ந்து கொண்டிருந்தன.

எனினும் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹீம் தனியொரு வீரராக போராடினார். அவரும் தன்பங்குக்கு 27 ஓட்டங்களை எடுத்து 9-வது விக்கெட்டாக ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணியின் தோல்வி உறுதியானது.

இறுதியில் பங்களாதேஷ் அணி 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 13 ஓட்டங்களால் பரிதாபகரமாக தோல்வி அடைந்தது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் மத்யூஸ் 3, சேனநாயக்க 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் திஸார பெரேரா தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது ஒருநாள் போட்டி 20-ம் திகதி ஆரம்பமாகிறது. (க)


# மரண அறிவித்தல்



## திருமதி பராசக்தி இராசரத்தினம்

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி 8-ம் வட்டாரத்தைப் புகுந்த இடமாகவும் கொண்டு தற்போது வவுணாவத்தை, துர்க்காபுரம் தெல்லிப்பழையில் வசித்து வந்தவருமான திருமதி பராசக்தி இராசரத்தினம் நேற்று (17.02.2014) திங்கள் இரவு காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா உருக்குமணி தேவி தம்பதிகளின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், செந்தூரன் (சிறுவர் பாதுகாப்பு அலுவலர், மாவட்டச்செயலகம், கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு தாயாரும், கௌரி (ஆசிரியை, யாழ்.இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும் துளசிகனின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு வவுணாவத்தை துர்க்காபுரம், தெல்லிப்பழை என்ற அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுணாவத்தை,
துர்க்காபுரம், தெல்லிப்பழை
T.P :- 077 610 8428
தகவல் - மகன்
இ.செந்தூரன்
(5624)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ...ந்துறைப் ...சபை, யாழ்ப்பாணம்

## ஜனாதிபதி ...

காணாமல் போனோர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்களாக நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுடன் நிறைவு பெற்றது.

இந்த விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்காக 240க்கும் மேற்பட்டவர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், 160 பேரளவிலேயே விசாரணைக்காக சமுகமளித்திருந்தனர்.

ஏற்கெனவே இந்த ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்திருந்தவர்கள் பெருமளவில் சமுகமளித்திருந்ததாகவும் அவர்களின் பெயர்கள் இந்த ஆணைக்குழுவினரால் மீண்டும் புதிதாகப் பதியப்பட்டு விசாரணைக்கான திகதி, கடிதம் மூலம் பின்னர் அறிவிக்கப்படும் எனக் கூறிவைக்கப்பட்டது.

இந்த விசாரணைகளுக்கு சமுகமளித்திருந்தவர்கள் பலரும் தமது துயரங்களையும், நிலைமைகளையும் ஆணைக்குழுவினருக்கு கண்ணீர் மல்க எடுத்துரைத்தனர். சிலர் ஆவேசம் கொண்டிருந்தார்கள். ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை குறித்தும், இந்த விசாரணையின் பலன் குறித்தும் கேள்வி எழுப்பியிருந்தார்கள்.

இறுதி யுத்தத்தின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பு கூறும் வகையில் காணாமல் போனவர்கள் தொடர்பில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைவாக உள்நாட்டிலேயே விசாரணைகளை நடத்துவதற்காக இந்த ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

இருப்பினும் இந்த ஆணைக் குழுவின் விசாரணைகளில் நம்பிக்கையற்ற நிலையிலேயே பாதிக்கப்பட்ட பலரும் விசாரணைகளில் கலந்து கொண்டதாக பேசிக் கொண்டனர்.

ஆயினும் யாழ்ப்பாணத்தில் விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்காக மக்கள் ஆர்வம் காட்டியிருந்ததாக ஆணைக் குழுவின் செயலாளர் கே.ஏ.குணதாச தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு உட்பட எல்லாமாக 15 ஆயிரத்து 528 விண்ணப்பங்கள் இது வரையில் கிடைத்திருப்பதாகவும், இருப்பினும் இவர்களில் சிலர் ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்திருப்பதை சாட்சியங்களை நேரடியாகப் பதிவு செய்யும்போது தாங்கள் கண்டறிந்துள்ளதாகவும் குணதாச தெரிவித்தார்.

அதிகம் பேர் காணாமல் போயிருக்கக்கூடிய பிரதேசங்களாகிய முல்லைத்தீவு உட்பட மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் விசாரணைகள் நடத்துவது பற்றிய அறிவித்தல்கள் எதுவும் வந்திருக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இலங்கைக்கு எதிராக...

எதிராக எவ்வித யோசனைகளையும் பிரித்தானியா சமர்ப்பிக்காது என்று கன்சவேட்டிவ் கட்சியின் இலங்கை நண்பர்களின் தலைவர் லயனல் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே பிரித்தானியாவில் வாழும் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற குழுவினர் பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தை சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதன்போது இலங்கைக்கு எதிராக பயண தடைகளை விதிக்க வேண்டும் என்று தமிழர்களுக் கானநாடாளுமன்றக்குழுகோரியிருந்தது.

இந்தநிலையிலேயே கன்சவேட்டிவ் இலங்கையின் நண்பர்கள் பொதுநலவாய அலுவலக அதிகாரிகளை சந்தித்துள்ளனர். (எ-11)

## மேலும் 2 எலும்...

இதன்போது மேலும் இரண்டு மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதோடு அடையாளம் காணப்படாத தடயப்பொருள் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மீட்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூட்டு எச்சங்களின் தொகை 64 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டுள்ள மனித எலும்புக்கூட்டு எச்சங்களுடன் மேலும் 2 எலும்புக்கூட்டு எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதுவரையில் 41 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்று செவ்வாய்க் கிழமை 25 ஆவது தடவையாக மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த புதைகுழி தோண்டப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## புனர்வாழ்வு...

லப்படாமல் யுத்தம் ஒன்றில் எப்படி ஈடுபடுவது. போரில் மக்கள் கொல்லப்பட்டாலும் முடிந்தளவில் அப்பாவி மக்களை காப்பாற்றினோம்.

12 ஆயிரம் விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களை அந்த நேரத்திலேயே கொன்றிருக்க முடியும். 12 ஆயிரம் தோட்டாக்கள் மட்டுமே செலவாகியிருக்கும்.

அப்படி செய்திருந்தால் புனர்வாழ்வு பயிற்சிகளை வழங்கும் தேவையிருந்திருக்காது. ஏனைய நாடுகளில் அப்படித்தான் செய்தன. வரிசையாய் நிற்க வைத்து சுட்டுக் கொலை செய்தார்கள். அத்தோடு அந்த கதை முடிந்து விடும்.

அப்படி செய்திருந்தால் அதனை பற்றி மட்டும்தான் பேசியிருப்பார்கள். நாம் சரணடைந்தவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுத்து, புனர்வாழ்வு பயிற்சிகளை வழங்கி, தொழில் தொடங்க பணத்தை வழங்கினோம்.

இந்த நிலையில், வெளிநாட்டு துரைமார் நீங்கள் மனித உரிமைகளை மீறினீர்கள் என்று குற்றம் சுமத்துகின்றனர். இது எவ்வளவு அநீதியான செயல்.

நாட்டு மக்கள் ஜனாதிபதியுடன் இருக்கும் வரையில் அவர்களால் எமது நாட்டுக்கு எதிராக எதனையும் செய்ய முடியாது. சிரியா, லிபியா போன்ற நாடுகளில் நடந்தது போல் ஆர்ப்பாட்டங்களை நடத்தி நாட்டின் தலைவரை வீதிக்கு இழுத்து வந்து கொலை செய்ய வெளிநாடுகள் முயற்சிக்கின்றன.

லிபியா போன்ற நாடுகளில் நடைபெற்றது போன்று இலங்கையில் மக்களை திரட்டி ஜனாதி பதிக்கு எதிராக கிளர்ச்சியை ஏற்படுத்த முடியாது. இலங்கை மக்கள் அப்படி செய்ய மாட்டார்கள் என்றார். (எ-11)

## படை முகாமிலிருந்த...

வினரால் அழைக்கப்பட்டிருந்த நிலையில் வெறும் 24 பேரே சமுகமளித்திருந்தனர்.இதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசாரணைகளில் நேற்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கே விசாரணைகள் நிறைவடைந்தன. இதேவேளை முற்பகல் 10.30 மணியளவில் ஆணைக்குழுவின் தலைவரும் உடல் நலம் குறைவாகயிருக்கின்றது என்று கூறி விசாரணைகளிலிருந்து விலகிக்கொண்டார்.

**மகனை மீட்டுத்தாருங்கோ?**

மானிப்பாய் பகுதியில் மிதி வண்டி திருத்தும் கடை வைத்திருந்த தன்னுடைய மகன் ஐயம்பிள்ளை நிரூபன் (வயது - 20) என்பவரும், அவருடன் நின்றிருந்த இளைஞர்கள் இருவரும் 1997 ஆம் ஆண்டு முதலாம் மாதம் 28ஆம் திகதி மானிப்பாயிலிருந்த கஜபாகு முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதனையடுத்து தமது பிள்ளை பிடித்துச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கேட்பதற்காக எனது கணவர் மானிப்பாயிலிருந்த கஜபா முகாமிற்கு சென்றார். அப்போது கணவன் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியிருந்தனர் அதில் இருதய நோயாளியான எனது கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேவேளை இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட தனது மகனை இராணுவத்தினர் உடுவில் இராணுவமுகாமிற்கு கொண்டு சென்றிருப்பதாகவும், தான் தெரிவித்தாக வேறு எவருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தனக்கு தெரிவித்ததாக குறித்த வயோதிபத் தாய் சாட்சியமளித்தார்.

அதேவேளை தனது மகனுடன பிடிக்கப்பட்ட மற்றைய இளைஞர்கள் இருவரும் ஒரு மாதத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் காணாமற்போன தனது மகனை மீட்டுத்தருமாறு அந்தப் பெண் ஆணைக்குழுவினரிடம் கண்ணீர்மல்க தெரிவித்தார்.

**மகனை காணவில்லை**

இதேவேளை கடந்த 1996 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 20 ஆம் திகதி தனது வீட்டிற்கு நள்ளிரவு 1.30 மணியளவில் இராணுவத்தினர் வருகைதந்தனர். வீட்டிற்கு வெளியில் நின்று செல்வம் (வயது-31) என்று எனது மகனை கூப்பிட்டனர். இதனையடுத்து 2 பேர் வீட்டிற்குள் நுழைந்தனர். இராணுவ உடையில்தான் அவர்கள் இருந்தனர். பலர் வெளியில் நின்றனர். அவர்களும் இராணுவ உடையில் நின்றதை அவதானிக்க முடிந்தது. தமிழிலும் சிங்களத்திலும் மாறிமாறி கதைத்தனர். அதன்பின்பு வெளியில் விசாரித்து விட்டு விடுவதாக கூறிச்சென்றனர்.

அதற்குப்பின்பு இன்றுவரை எனது மகனைக்காணவில்லை. சின்னக்கடை இராணுவ முகாமிற்கு சென்று விசாரித்தபோது குப்பிளானுக்கு கொண்டு சென்றதாக கூறினர் என்றார் வயோதிபத் தாயொருவர்.

**மகனும் மகளும்**

தனது மகன் கோசலன் (வயது-20) மகள் சிறிவதனி (வயது-22) ஆகிய இருவர் காணாமற்போனார்கள் என்று சாட்சியமளித்தார் குடும்பபெண் ஒருவர். கடந்த 2007ஆம் ஆண்டு சித்திரை மாதம் 14 ஆம் திகதி யாழ். ஈச்ச மோட்டை பகுதியில் மாலை 5.30 மணியளவில் இராணுவத்தினர் மறித்தனர்.

இதன்போது அவர்கள் வாழைப் பழம் வாங்க எனது மகனை அனுப்பியுள்ளனர். பின்பு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எனது மகனை அடித்து இழுத்துச் சென்றனர்.

இதன்போது இராணுவத்தினர் நன்றனர். அவர்களின் முன்புதான் எனது மகன் கடத்தி செல்லப்பட்டார். இதனை இந்திரன் என்பவர் கண்ணால் கண்டார். அத்தோடு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றவர்கள் எனது மகனை அடித்தனர். அத்தோடு மயக்க மருந்து கொடுத்து தாக்கினர். அதனால் எனது மகன் மயங்கி விட்டான். இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மகனை நடுவில் அமர வைத்துக்கொண்டு சென்றனர்.

இதனைக் கண்ணால் கண்ட சாட்சியான இந்திரன் என்பவர் என்னிடம் தெரிவித்தார்.

அவர் சொல்லித்தான் எனக்குத் தெரியும். அதேவேளை மகனின் சைக்கிள், ஒரு செருப்பு , வாழைப் பழம் என்பன மகன் கடத்தப்பட இடத்திலிருந்ததாகவும் சாட்சியமளித்தார்.

மகள் சிறிவதனி, கடந்த 2005. 6. 25 ஆம் திகதி காணவில்லை. மானிப்பாயில் காணாமற்போனார். தந்தையின் மரண வீட்டுக்கு வந்தவர் குருநகர் பகுதியிலுள்ள அண்ணனின் வீட்டுக்கு சென்றபோது காணாமற்போனார் என்றும் அந்ததாய் சாட்சியமளித்தார். (எ-6)

## ராஜீவ் கொலை...

கருணை மனுக்களை பரிசீலிப்பதற்காக, ஜனாதிபதி அதிக காலம் எடுத்துக் கொண்டதால் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று கோரி உச்சநீதிமன்றத்தில் ஏற்கெனவே மனு தாக்கல் செய்தனர்.

கடந்த 4 ஆம் திகதியன்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.சதாசிவம் மற்றும் நீதிபதிகள் ரஞ்சன் கோகோய், சிவ்கீர்த்தி சிங் ஆகியோர் முன்னிலையான அமர்வில் அரசுத் தரப்பில் அட்வகேட் ஜெனரல் வாகன்வதி தன்னுடைய வாதங்களை முன்வைத்தார்.

பின்னர் இருதரப்பு வாதங்கள் முடிவடைந்த நிலையில், திகதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் எழுத்து பூர்வமான விளக்கங்களை தாக்கல் செய்யுமாறும் நீதிபதிகள் உத்தர விட்டனர். இந்த நிலையில் பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர் தரப்பில் எழுத்து பூர்வமான விளக்கங்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை தொடர்பாக இன்று செவ்வாய்க் கிழமை தீர்ப்பு வழங்கப்பட விருக்கிறது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.சதாசிவம் தலைமையிலான அமர்வே தீர்ப்பை வழங்கவிருக்கின்றது என்றும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## இலங்கையின்...

பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் மூன்றாவது முறையாகவும் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான பிரேரணையை கொண்டு வருகிறது.

குற்றச்சாட்டுக்களை சுமத்தி கொண்டு வரப்படும் இந்த பிரேரணை காரணமாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும்.

அமெரிக்கா, இலங்கைக்கு எதிராக சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை அல்ல. அவை குற்றச்சாட்டுக்கள் மட்டுமே என்ற போதிலும் அமெரிக்கா அந்த குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டவை போல் செயற்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## புலிகளுடன் ...

உட்பட்ட காணாமல் போனோர் தொடர்பிலான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இதன்போது சாட்சியமளிக்க வருகைதந்திருந்த காணாமற் போனோரின் உறவினர்களிடம் தவறாமல் இந்தக்கேள்வியினை ஆணைக்குழுவினர் கேட்டிருந்தனர். ஆனால் இந்தக்கேள்விக்கு பதிலளித்தவர்களில் பலர் அவ்வாறு எந்த இயக்கத்துடனும் தொடர்பிருந்ததில்லையென்று தெளிவாக சாட்சியமளித்தனர். (எ-6)

## கடற்படை மீதும்...

தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசாரணையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காணாமல் போனோர் தொடர்பிலான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இதன்போது சாட்சியமளித்த வயோதிபத் தாயொருவர் தனது மகனை கடற்படையினர்கடத்திச் சென்றதாகவும் அதனை பலர் கண்டுள்ளதாகவும் கடந்த 2007 ஆம் ஆண்டுக்குப் பிறகு தனது மகன் காணாமற்போனதாகவும் சாட்சியமளித்தார். (எ-6)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

பதவி வெற்றிடம்
கனேடிய கம்பனியின்
விரிவாக்கக் கிளையான GRANTON GROUP
நிறுவனத்தின் நிர்வாகத் துறைக்கு பயிற்சியுடன் பதவி வெற்றிடம்.
■ O/L ல் இருந்து 18-35 வயது உடையவர்களுக்கு!
■ பயிற்சி காலத்தில் 12,000- 18000/- வரை
■ EPF/ETF, மருத்துவம், தங்குமிட வசதி.
■ பயிற்சியின் பின் 35,000/- 65,000/-
■ எப்பிரதேசத்தினரும் நேர்முகத் தேர்விற்கு தோற்ற முடியும்.
அழைக்க : 077 2712511, 021 4919591
(5623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.